உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சைவநீதி
# SAIVANEETHI




| மலர் 07 | சுபானு - ஆவணி | AUGUST - SEPTEMBER 2003 | இதழ் 05 |
| --- | --- | --- | --- |




ரூபா 25/=


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1. அர்ச்சனை பாட்டேயாகும்.....01
2. திருஞானசம்பந்தர் மூர்த்தி தேவாரம்.....02
3. சந்நிதி முருகன்.....04
4. திருத்தொண்டத் தொகை எழுந்த கதை.....06
5. செல்வச்சந்நிதி முருகன்.....08
6. சிவப்பிரகாசம்..... 12
7. உலோபம்.....15
8. திருவிளக்கிடுதல்.....17
9. ஈவது விலக்கேல்.....18
10. சைவபூஷணம்..... 20
11. கல் உருகும் .....22
12. இனிதமான மனிதத்தின் புனிதமான இறுதியாத்திரை.....24
13. சந்நிதிக் கந்தன் காப்பான்.....27
14. நினைவிற் கொள்வதற்கு


**சந்தா நேயர் கவனத்திற்கு**

- முகவரி மாற்றம் இருப்பின் எமக்கு அறியத்தரவும்.
- உரிய காலத்தில் சந்தாவைப் புதிப்பித்துக்கொள்ளவும்.
- இதழ்கள் ஒழுங்காகக் கிடைக்காவிடின் எம்முடன் தொடர்பு கொள்ளவும். கிடைக்காத இதழ்களை அனுப்பிவைப்போம்.

## சைவநீதி மாத இதழ்
## பெறுமதி விபரம்

தனிப்பிரதி ரூபா 25.00 ஆண்டொன்றிற்கு ரூபா 250.00 ஏனைய நாடுகளில் ஆண்டொன்றிற்கு ஸ்ரேலிங் பவுண் 10 அல்லது US$ 15 சைவநீதியின் வளர்ச்சியில் எங்கள் பங்களிப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக.


சந்தா அனுப்பவேண்டிய முகவரி:
C.Navaneethakumar
30, Ramya Road, Colombo 04
Sri Lanka
T.Phone No: 2580458


சைவநீதி இதழில் வெளிவரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர். - இதழ் நிர்வாகிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

சைவநீதி

SAIVANEETHY

17 OCT 2003

மலர் 8 சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ் —5

கௌரவ ஆசிரியர்:
கலாபூஷணம், ஞானகிரி மணி, சைவப்புலவர்மணி, வித்துவான்,
அமரர்-திரு.வ.செல்லையா

ஆலோசகர்:
சிவஸ்ரீ-கு.குருலிங்கேஸ்வரக்குருக்கள்

திரு.D.M.சுவாமிநாதன்
அறங்காவலர்.
ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர்
தேவஸ்தானம்

திரு.அ.கந்தசாமி
ஜே.பி.

திரு. ஆ.கைலாயலிங்கம்

பதிப்பாசிரியர்:
திரு.வே.திருநீலகண்டன்
மஹதி அச்சகம்

விநியோகம்:
திரு.க. [illegible]
ஓய்வுபெற்ற கோட்டக் கல்வி
அதிகாரி

நிர்வாக ஆசிரியர்:
திரு.செ.நவநீதகுமார்
50.ரம்யா ரோட், கொழும்பு 04

தொடர்புகட்கு: [illegible]
தொலைபேசி: 2580438

## அர்ச்சனை பாட்டேயாகும்.

எங்கும் நிறைந்த பரம்பொருள் ஆன்மாக்களுக்கு அருள்புரிவதற்கு எழுந்தருளியுள்ள இடம் ஆலயமாகும். நித்தமும் ஆலயத்திற்குச் சென்று வழிபடுதல் வேண்டும். நாள்தோறும் செல்ல வசதி இல்லாதவர்கள் விசேட தினங்களில் சென்று வழிபாடு செய்தல் வேண்டும். இறைவன், குரு, பெரியோர், குழந்தைகள், நோயாளர் ஆகியோரிடம் வெறுங் கையுடன் செல்லக்கூடாது. ஆலயத்திற்குப் போகும் போது பாக்கு, வெற்றிலை, பழம், தேங்காய், பூ என்பவற்றைக் கொண்டுசெல்ல வேண்டும். இவை அர்ச்சனைப் பொருட்கள் எனப்படும். ஆலயவழிபாட்டில் அர்ச்சனையும் இடம்பெற வேண்டும்.

இறைவனுக்குப் பிரியமானவை அர்ச்சனை அருட்பாக்களைப் பாடுவதாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு இறைவன் அர்ச்சனை பாட்டேயாகும். ஆகையால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுகென்றார்.

பாடுதல் சிறந்த அர்ச்சனை. எந்தப்பாடல்களைப் பாடுதல் வேண்டும்? திருமுறைப் பாடல்களைப் பாடுதலே சிறந்தது. இறை அருள் பெற்று அற்புதங்கள் நிகழ்த்திய அருளாளர்களின் பாடலைப் பாடுவதன் மூலம் நாமும் இறை அருள் பெறலாம். பாடும் போது தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, புராணம் என்ற ஒழுங்கு முறையில் பாட வேண்டும். புராணம் பாடும்போது பெரியபுராணப் பாடல் மட்டுமே பாட வேண்டும்.

தனியே பாடுவதிலும் கூடிப்பாடுதலால் பயன் அதிகம். ஆகையால் வாரத்தில் ஒரு நாளிலாவது கூட்டுவழிபாடு செய்தல் வேண்டும். பலர் கூடியிருந்து சேர்ந்து பாடப்பழகவேண்டும்.

-பாதம் அருமேன் படுதுயர் களையாய்
பாசுபதா பரஞ்சுடரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகத்தியர் தேவாரத்திரட்டு
## 5-திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

### பஞ்சாக்கரத் திருப்பதிகம்
### அஞ்செழுத்துண்மை

திருச்சிற்றம்பலம்

பண்- காந்தாரபஞ்சமம்

துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்று அடி வாழ்த்த வந்த கூற்று
அஞ்ச உதைத்தன அஞ்செழுத்துமே 01

மந்திரம் நான்மறை ஆகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை ஆள்வன
செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே. 02

ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞான விளக்கினை ஏற்றி நன்புலத்து
ஏனைவழிதிறந்து ஏத்துவார்க்கு இடர்
ஆன கெடுப்பன அஞ்செழுத்துமே 03

நல்லவர் தீயரெனாது நச்சினர்
செல்லல் கெட சிவமுத்தி காட்டுவ
கொல்ல நமன் தமர் கொண்டு போமிடத்து
அல்லல் கெடுப்பன அஞ்செழுத்துமே. 04

கொங்கு அலர் வன்மதன்வாளி ஐந்து அகத்து
அங்குளபூதமும் அஞ்ச ஐம்பொழில்
தங்கு அரவின் படம் அஞ்சும் தம்முடை
அங்கையில் ஐவிரல் அஞ்செழுத்துமே 05

தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினை அடர்ந்து எய்தும் போழ்தினும்
அம்மையினும் துணை அஞ்செழுத்துமே 06

வீடு பிறப்பை அறுத்து மெச்சினர்
பீடை கெடுப்பன பின்னை நாள்தொறும்
மாடு கொடுப்பன மன்னும் மாநடம்
ஆடி உகப்பன அஞ்செழுத்துமே. 07

வண்டு அமர் ஓதி மடந்தை பேணின
பண்டை இராவணன் பாடி உய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்த பின்னவர்க்கு
அண்டம் அளிப்பன அஞ்செழுத்துமே. 08

கார் வணன் நான் முகன் காணுதற்கு ஒணா
சீர்வணச் சேவடி செவ்வி நாடொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்
கார் வணம் ஆவன அஞ்செழுத்துமே. 09

புத்தர் சமண் கழுக்கையர் பொய்கொளாச்
சித்தத்தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறணிவார் வினை பகைக்கு
அத்திரம் ஆவன அஞ்செழுத்துமே. 10

நற் றமிழ் ஞான சம்பந்தன் நான் மறை
கற்றவன் காழியர் மன்னன் உன்னிய
அற்றம் இல் மாலை ஈர் ஐந்தும் அஞ்செழுத்து
உற்றன வல்லவர் உம்பர் ஆவரே. 11

திருச்சிற்றம்பலம்

### பொழிப்புரை

ஸ்ரீ பஞ்சாக்கரமே கரவு ஒழிந்து திருவடியைப் போற்ற மேலிட்டு வந்த காலனும் அஞ்சுமாறு உதைத்துக்காத்தன. (ஆதலால்) உறங்கும் காலத்திலும் அஃதில்லாத காலத்திலும் (அவற்றை) மனம் கசிந்து நாடோறும் நினைப்பீர்களாக என்றவாறு. (1)

மறைமொழிகளும் நான்கு வேதங்களும் ஆய் தேவர்களது மனத்தில் இருந்து அவர்களை ஆண்டருளும் தன்மையுடையன. செவ்விய வேள்வித் தீயைவளர்க்கின்ற செந்நெறிச் செல்வர்களாகிய மறையவர்க்கு மாலைக் காலத்திலே செபிக்கப்படும் மந்திரமாகிய ஸ்ரீ பஞ்சாக்கரமேயாம் என்றவாறு. (2)

உடம்பில் சுவாசித்தலை அடக்கி மிக்க ஒளியையுடைய ஞான விளக்கை மிளிரச்செய்து நன்மையாகிய இடத்தில் மற்றைய வழியாகிய சுழிமுனையைத் திறந்து வழிபடுவார்க்கு பிறவித்துன்பமானவற்றை நீக்கும் தன்மை யுடையன ஸ்ரீ பஞ்சாக்கர மேயாம் என்றவாறு. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் நல்லவர் இவர் தீயவர் என்று எண்ணுதல் இன்றி (யாவராயினும்) விரும்பினவர்களது பிறவித்துன்பம் கெடும்படி விவேகத்துடன் கலக்கும் வீடு பேற்றை கொடுப்பனவும் இயம தூதுவர்கள் கொல்லும்போது கொண்டு செல்லும் பயத்தில் நிறுத்தி துன்பத்தை ஒழிப்பனவும் ஸ்ரீ பஞ்சாக்கரமேயாம் என்றவாறு. (4)

இறைவனை வழிபடுதொழிந்து பாவமோடும் வெல்லுதற்குரிய வல்லமை வாய்ந்த காம வேளது அந்த ஐவகைச் சிலைகளும் உரிய மலர் வழங்கின்ற பூக்களாகிய அம்புகளும் ஐந்தாம். உடம்பினுள்ளே அமைந்த தன்மாத்திரைகளும் ஐந்தாம். இறைவனது திருமேனியில் வசிக்கின்ற பாம்பினது படம் பொருந்திய தலைகளும் ஐந்தாம். இறைவனது திருக்கரத்தினிடத்து திருவிளம்பமும் ஐந்தாம். இறைவனது நாம மந்திரமாகிய திருவெழுத்துக் களும் ஐந்தேயாம் என்றவாறு. (5)

தும்பல் இருமல்கள் வந்த காலத்திலும் கொடுமையாகிய நரகத் துன்பம் ஏற்பட்ட காலத்திலும் இப்பிறப்பில் கருணையாகிய பிராரத்த கன்மங்கள் மேல் வந்து வருத்தும் காலத்திலும் மறுபிறப்பிலும் துணையாயிருப்பன ஸ்ரீ பஞ்சாக்கரமேயாம் என்றவாறு (6)

புகழ்ந்தவர்களுடைய சாதகப் பிறவிகளை அழித்துத் துன்பத்தை நீக்குவனவும், மேலும் தினந்தோறும் செல்வத்தைக் கொடுத்து உதவுவனவும், நிலைபெற்ற சிறந்த திருநடனத்தைச் செய்து மகிழ்ப்பனவும் (மலை பெண்) ஸ்ரீ பஞ்சாக்கரமேயாம் என்றவாறு. (7)

வைசிரியன் விரும்புகின்ற அளகாபுரத்தை அரசாட உமாதேவியார் விருந்தி வழி பட்டனவும், முற்காலத்து இராவணன் வாழ்ந்தபடி உயிர்த்து ஏதுவாயிருந்தனவும், அடியார்கள் உறுதிப் பொருளாகக் கொண்டு தோத்திரம் செய்த பின்பு அவ்வடியார் வழுவாது முக்தி உதவுத் துணையாம் ஸ்ரீ பஞ்சாக்கரமேயாம் என்றவாறு. (8)

சிறப்புவாய்ந்த அழகிய திருவடியை வெவ்வி அறிந்து தினந்தோறும் பல பெயர்களால் எடுத்தோதி ஏத்தா நிற்கும் அடியவர்க்கும் இன்பம் நுகர்விக்கும் தன்மையுடைய ஆவன ஸ்ரீ பஞ்சாக்கரமேயாம் என்றவாறு. (9)

புத்தர்களும் சமணராகிய குருவினைப் பற்றிய கையினையுடையவர்களும் (ஆகிய இவர்களின்) பொய்யுரைகளைக் கொள்ளாத உள்ளமுடையவர்களாகிய சிலருடைய பரம்பொருளை ஐயந்திரிபறத் தீர்மானித்து நிச்சயிக்க தன்மை புடையனவும், ஞானத் திருவுருவத்தை புனைய திருநீற்றினைத் தரிப்பவர்களது வினைப்பகையைச் செகுக்கும் படையாயிருப்பனவும் ஸ்ரீ பஞ்சாக்கரமேயாம் என்றவாறு. (10)

நன்மை பயக்கும் திருநெறித் தமிழ் வல்ல திருஞானசம்பந்தரும் நான்காகிய வேதங்களையும் ஓதுபவர் தலைவரும் சீகாழியில் உள்ளார்க்குத் தலைவரும் ஆகிய யான் கருதிச் சொன்ன முறைகள் தொன்மையாக வாய்ந்த பத்துத் திருப்பாட்டுக்குள் திருவைந்தெழுத்துப் பொருந்திவைப்பவர் ஓது வல்லவர் தேவர் ஆவார்கள் என்றவாறு. (11)

முகில் நிறமுடைய திருமாலும், நான்கு முகங்களுடைய பிரம்மனும், காணமாட்டாத

## உறவினர்கள் எவர்?

உற்றார் சொல்லாம் உறவினர் எல்லாம் இரத்த தொடர்பாலும் குடும்பத் தொடர்பாலும் உறவினராக இருப்பவர்கள் எல்லாருமே உறவினர் அல்ல. உயிர்போற்று அன்பு காட்டி பணத்தையல்லாது ஆதரவை சந்தர்ப்பங்களில் உதவுபவரே உண்மையான உறவினர் என்கின்றார்கள்.

வெற்றி வேற்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதி முருகன்

இலங்கையில் உள்ள புகழ்பெற்ற முருகன் ஆலயங்களுள் செல்வச்சந்நிதி ஆலயமும் ஒன்றாகும். செல்வச்சந்நிதி என்பதன் பொருள் முருகப்பெருமானுடைய திருவருள் செல்வம் நிறைந்த இடம். யாழ்ப்பாணத்தில் உள்ள வடமராட்சிப் பகுதியில் அமைந்துள்ள தொண்டைமானாற்றின் கரையில் அமைந்துள்ளது இவ்வாலயம். இங்கு எழுந்தருளியுள்ள முருகப் பெருமானை ஆற்றங்கரையான், அன்னதானக் கந்தன், சந்நிதி முருகன், [illegible] கந்தன் எனப் பல பெயர்களால் அழைப்பார்கள். வேண்டுவோர்க்கு வேண்டுவன தந்து அடியவர்கள் அனைவரையும் காக்கும் அற்புதத் தெய்வம் சந்நிதியான் பெருமை சொல்லில் அடங்காது.

சந்நிதியான் வரலாறு மிக, மிகத் தொன்மையானது. மிகப் பழமையான இக்கோவில் பற்றிப் பல கதைகளுள்ளன. மருதர் கதிர்காமர் என்பவர் தொண்டைமானாற்றங்கரையில் மீன் பிடித்து வாழ்ந்து வந்தவர். அவரை நோய்வாய் கதிர்காம [illegible] என்று [illegible] தாம். [illegible] சென்ற கதிர்காமருக்கு முருகப் பெருமான் சிறுவனாகக் காட்சி கொடுத்தாராம். அச்சிறுவன் கதிர்காமரை நோக்கி 'தொண்டைமானாற்றங்கரையில் இருக்கிற பூவரச மரத்தடியில் எனக்கு ஒரு ஆலயம் அமைத்து வழிபடு' என்று கட்டளையிட்டான். கதிர்காமர் தான் படிப்பறிவில்லாதவர் எனவும், பூசை முறைகள் தெரியாது என்றும் கூறினார். சிறுவனான முருகன் கதிர்காமரைக் கண்ணை மூடுமாறு கூறிக் கதிர்காமம் அழைத்துச் சென்று அங்கு நடைபெறும் பூசை முறைகளைக் காட்டினான். அன்று தொட்டு பக்தரான கதிர்காமர் தொண்டைமானாற்றங்கரையில் பூவரசமரத்தடியில் வேலைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தார்.

**க. யோகேஸ்வரி M.A.**

இவ்வாறு ஆலய வரலாறு மட்டுமின்றி ஆலய வழிபாட்டு முறைகளும் கதிர்காமத்துடன் தொடர்புடையதாக உள்ளன. ஆகம விதிமுறைக்கு அமையாது இந்த கோவிலிலெல்லாம் பூசகர்கள் பூசை செய்வார்கள். மந்திரம் அறியாமையால் அவர்கள் வாயைக் கட்டி பூசை செய்கின்றனர். [illegible] சந்நிதி முருகனே கதிர்காமத்தில் திருவிழா நடைபெறும் பொழுது எழுந்தருளுகிறார். எனவே அவ்வேளை [illegible] பக்தர்களும் சிறிது தூரம் சென்று வழியனுப்புவார்கள். கதிர்காமத்தில் எழுந்தருளிய முருகன் திரும்பி வந்து சந்நிதி ஆலயத்திற்கு மீண்டும் எழுந்தருளுவதாகப் பாவனை செய்யும் சடங்கும் நடைபெறுகின்றது. இதனால் சந்நிதியைச் சின்னக் கதிர்காமம் என்று அழைக்கும் வழக்கமும் உள்ளது.

மகிழ்ச்சிதரும் இதமான பூவரசம் நிழலில் இவ்வாலயம் அமைந்துள்ளது. பக்கத்தே [illegible] கடலிலிருந்து வீசும் குளிர்ச்சியான காற்றும், மருதமரங்கள், ஆலமரங்கள் நிறைந்த அமைதியான சூழலும் பக்தர்களுக்கு மனநிம்மதியைக் கொடுக்கின்றன. இங்கு [illegible] கோபுரங்களோ, கோவிலைச் சுற்றி உயர்ந்த மதில்களோ இல்லை. மூலஸ்தானத்தில் இருப்பது முருகனுடைய படைக்கலமாகிய வேல் ஆகும். அங்கே பிரதான வேலுடன் பக்தர்கள் காணிக்கையாகக் கொடுக்கும் வேல்களும் உண்டு. [illegible] கொடிமரம் நாட்டப்படுவதில்லை. கொடிமரம் இருக்க வேண்டிய இடத்தில் கொடியேற்ற தினங்களில் [illegible] நட்டு [illegible] என்பர். கொடியேற்றத்துக்கு முன்னர் கடலில் இறங்கி தீர்த்தம் எடுத்து வரும் வழக்கமும் உண்டு. முன்னர் அந்தணரோ [illegible] [illegible] வரை [illegible] வழக்கம் இருந்ததாகக் கூறப்படுகின்றது. ஏனைய ஆலயங்களுடன் ஒப்பிடும் போது சந்நிதியான் வழிபாட்டு முறை முற்றிலும் வேறுபட்டதாகத் தெரிகின்றது.

அறிவு அற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்அழிக்கல் ஆகா அரண் - 421

அறிவு, அழிவு வராமல் காக்கும் கருவியாகும். பகைவராலும் அழிக்க முடியாத உள் அரணும் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதியானுக்குத் தினமும் மூன்று காலப் பூசைகளும், வெள்ளிக் கிழமைகளில் ஆறுகாலப் பூசைகளும் நடைபெறுகின்றன. பூசை முடிவில் விபூதி, தீர்த்தம், இறைவனுக்குப் படைத்த அமுது என்பன வழங்கப்படும். ஆலய மகோற்சவம் ஆவணி மாதப் பூர்வபட்ச பிரதமைத் திதியில் ஆரம்பமாகி, பௌர்ணமியின் தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவு பெறும். மகோற்சவத்தை விட வைகாசி விசாகம், கந்த சஷ்டி, நவராத்திரி போன்றவையும் சிறப்புப் பெறுகின்றன. இவ்வாலயத்தில் பூசை நேரத்தின் போது பறை ஒலிக்கப்படும். மணிச்சத்தமும், பறை முழக்கமும் கேட்கப்பெற்ற அடியார்கள் பரவசமடைவார்கள். அந்நேரத்தில் சில பக்தர்கள் தம்மை மறந்து, தமது சூழலை மறந்து இறைவனோடு ஒன்றிவிடுவார்கள். பறை ஒலிக்கேற்ப அவர்கள் உரு ஆடுவர். அவர்கள் வாயால் முருகன் நாமத்தை உச்சரிக்க, கை கூப்பி, கண்களிலிருந்து கண்ணீர் பெருக அவர்கள் ஆடும் ஆட்டம் சந்நிதிப்பெருமானின் முன் நின்று காணக்கூடிய ஒன்றாகும். பூசை முடிந்து பூசகர் அவர்களுக்கு விபூதி போடும் வரை அவர்கள் ஆட்டம் தொடரும். பக்தர்கள் விபூதி வாங்கும் போது பூசகரை விழுந்து வணங்குவது, பூசகர் விபூதியை வாயில் இட்டு கண்மூடிப் பரவசமாக நிற்பது என்பன அங்கு தினமும் காணும் காட்சியாகும்.

கோவிலைச் சுற்றி அமைந்துள்ள மடங்கள் சந்நிதியானுடைய சிறப்பு அம்சங்களில் ஒன்றாகும். வேறெந்தவாலயத்திலும் இல்லாத அளவுக்கு அந்த மடங்கள் உள்ளன. ஞானியர், யோகியர், சீவனத்திற்கு வழியில்லாதோர், தீராத நோயாளர், குடும்பப்பிரச்சினைகளால் குடும்பத்தைப் பிரிந்தோர், எனப் பல திறத்தினர் இம்மடங்களில் தங்கியிருப்பார்கள். முருகப் பெருமான் மீது கொண்டுள்ள அளவிலாத நம்பிக்கை, ஆற்றங்கரைக் குளிப்பு, கடற்காற்று, அமைதியான சூழல், மடங்களிலே பரிமாறப்படும் உணவு என்பன அவர்களைச் சந்நிதியானிடம் நிரந்தரமாகத் தங்க வைத்துள்ளன. பசிப்பிணி தீர்க்கும் கந்தன் அடியாருக்கும் உணவளிப்பவன். அவன் சந்நிதியில் அன்னதானம் நடக்காத நாளே இல்லை எனலாம். இதனால் அவனுக்கு அன்னதானக் கந்தன் என்றும் ஒரு திருநாமம் உண்டு. மடங்களைத் தஞ்சம் புகுந்து, தமது பிரச்சினைகளைக் கந்தனிடம் முறையிட்டு, பிரச்சினைகள் தீர்ந்ததும் தமது இல்லங்களுக்குச் செல்வார்கள். வருடா வருடம் அன்னதானம் கொடுத்துத் தமது நன்றியை இறைவனுக்குச் செலுத்துவார்கள். விரத நாட்களிலும் பண்டிகைகளின் இருக்காது மடங்களில் தங்கியிருந்து விரதம் அனுட்டிப்பர். மடங்களில் இருப்பது தெய்வீகச் சூழலில் அமைவதால் பக்தருக்கு வேண்டிய இறையுணர்வையும், மன அமைதியையும் கொடுக்க வல்லன. முடி இறக்குதல், சோறு தீத்துதல், காது குத்துதல் போன்ற நேர்த்திகளை நிறைவேற்றுவோரும் அன்னதானம் செய்வார்கள். சந்நிதி முருகன் ஆலய வழிபாட்டின் பின்பு அங்குள்ள அன்னதான மடங்களில் பசியாறிச் செல்வதே ஒரு தனி அனுபவம் ஆகும். இம்மடங்களில் எம்மவர்கள் மட்டுமின்றி பிற நாட்டவர்களும் தங்கி இருந்துள்ளார்கள்.

சந்நிதியின் ஆலய இலையில் அமுது படைக்கும் வழக்கம் ஒன்று உள்ளது. இப்படையல் சோற்றை மருந்து என்று குறிப்பிடுவார்கள். சந்நிதியானுக்குப் படைத்த அமுதை மருந்து என்று வாங்கி உண்போர் தீராத நோய் தீர்ந்துள்ளனர். பலப்பல நோயாளிகள் இங்கு தங்கியிருந்து இம்மருந்தை உண்டு குணமாகியுள்ளார்கள். இது நம்பிக்கையின் பாற்பட்டது.

முருகன் சந்நிதியில் காவடி எடுத்து நேர்த்திகளை நிறைவேற்றுபவர்களை ஆலயத்தில் பெருந்தொகையாகக் காணலாம். கோவிலுக்குச் சுற்றுவட்டாரத்தில் இருப்பவர்கள் மட்டுமன்றி, அயல் கிராமங்களிலிருந்தும், தொலைதூரங்களிலிருந்தும் சந்நிதியானை நோக்கிக் காவடி எடுத்து வருவார்கள். காவடிகள் பால்காவடி, ஆட்டக்காவடி, பறவைக்காவடி எனப் பல வகைக் காவடிகள் எடுக்கப்படுகின்றன. காவடி எடுப்பவர்கள் தொண்டைமானாற்றில் நீராடி மடங்களில் இருந்து காவடி எடுப்பர். சிலர் தமது ஊர்க்கோவில்களில் தொடங்கி சந்நிதியானை நோக்கி நெடுந்தூரம் நடந்து, நாதஸ்வரம், தவில்

மறு பக்கம் பார்க்க......

Wisdom is a weapon to ward off destruction; it is an interfortress which enemies cannot destroy.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத் தொண்டத் தொகை எழுந்த கதை

-சைவப் புலவர்மணி வ. செல்லையா-

குரு, லிங்க, சங்கமம் ஆகிய மூன்றும் சைவர்களாகிய நமக்கு வழிபாட்டுக்குரியன. குரு நமக்கு ஞானமூட்டி வழிப்படுத்துபவர். லிங்க மூர்த்தமாயிருந்து ஆண்டவன் நம் வழிபாட்டை ஏற்று அருள்பாலிப்பான். சங்கமம் என்பது அடியார் திருக்கூட்டம். அடியார் உள்ளத்திலும், அடியார் நடுவிலும் ஆண்டவன் வீற்றிருந்து நம்மை ஆட்கொள்ளுகிறான். இவ்வுண்மைகளை நாம் தெரிந்து கொள்ளுதல் மிகமிக அவசியமானது. ஔவையார் பெரியது எது என்று கூறும்போது "தொண்டர் உள்ளத்திலே ஒடுங்குவன்" என்றும் "தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்றும் கூறுகிறார். மணிவாசகப் பெருந்தகையும் "அடியார் நடுவில் நீயிருத்தி ஆதலின் அவ்வடியார் நடுவில் நானிருக்கும்" பேற்றைத் தரும்படி பொன்னம்பலத்தாரை வேண்டி நிற்கிறார். இதனால் அடியார் பெருமையை விளங்கிக் கொள்ளலாம். இங்ஙனமாக அடியார்கள் ஒன்று சேர்ந்து சங்கமமாகின்றார்கள். சங்கமம் என்பதற்கு ஒன்று கலத்தல்- ஒன்று சேருதல் அஃதாவது ஒன்றாதல் என்ற பொருள்தரும் கொள்ளப்படும். அடியாரும் ஒன்று சேர்ந்து இறைவனோடு சங்கமமாதலால் அடியார் திருக்கூட்டம் சங்கமமென்றாயிற்றுப் போலும்.

மலைநாட்டிலுள்ள செங்குன்றூரில் வேளாளகுலத்தில் விறன்மிண்டர் தோன்றினார். இவர் பரமசிவனையே திருவடிகளிலே தன் மனதைப் பதித்து உலகப்பற்றுப் புறப்பற்றை அறுத்தார். அவர் அடியார் பக்தியிலே உயர்வொப்பில்லாதவராக விளங்கினார். அவர் சிவஸ்தலங்களுக்குச் சென்ற போதெல்லாம் அடியார் திருக்கூட்டத்தையே முந்து வணங்கிக் கொண்டே, பின் சிவபெருமானை வணங்குபவர். அவர் தாம் வசிக்கும் மலைநாட்டை நீங்கி பல தலங்களுக்குஞ் சென்று சிவனடியார்கள் ஒழுகும் ஒழுக்கத்தை அநுபவித்து அவ்வெல்லாந் தங்கிச் சிவபெருமானை வழிபட்டுத் திருவாரூரை யடைந்தார். அங்கு சுவாமி தரிசனஞ் செய்து கொண்டு சில காலந் தங்கியிருந்தார்.

திருவாரூரிற் தியாகேசப் பெருமான் ஆலயத்திலுள்ள தேவாசிரிய மண்டபத்தில் அடியார் திருக்கூட்டம் தினமுங் கூடும். அடியார்கள் ஒன்று சேர்ந்து சிவ பெருமானின் புகழைப் பாடிப் பிரார்த்தனை செய்து கொண்டிருப்பார்கள். ஒருநாள், சுந்தரமூர்த்தி நாயனார் தேவாசிரிய மண்டபத்தில் எழுந்தருளியிருக்கின்ற சிவனடியார்களை வணங்காது ஒரு பிரகாரம் ஒதுங்கிச் சென்றதை அங்கிருந்து பிரார்த்தனை செய்து கொண்டிருந்த விறன்மிண்ட நாயனார் கண்டார். "அடியார்களை வணங்காமற் செல்கின்ற வன்றொண்டன் அவ்வடியார்களுக்குப் புறகு; அவனை வலிய ஆட்கொண்ட பரமசிவனும் புறகு" என்று விறன்மிண்ட நாயனார் கூறினார். அதனைக் கேட்ட வன்றொண்டர் தன் பிழையை உணர்ந்து வருந்தினார். விறன்மிண்டரிற் சங்கம பக்தி இருப்பதைக் கண்டு மகிழ்ந்து சுந்தரமூர்த்தி நாயனார் அவருக்கும் அடியேன், எல்லா அடியார்களுக்கும் அடியேன் என்று வணங்கி நின்றார். இக்கருத்தினை நினைவுறுத்தி என்றும் பாராயணஞ் செய்யத் தக்க "தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்று தொடங்கும் திருத் தொண்டத் தொகை என்னும் திருப்பதிகத்தை இறைவனருள் கொண்டு பாடியருளினார். அதைக்கேட்டு விறன்மிண்ட நாயனார் மகிழ்ந்து இவ்வன்றொண்டருடைய மனம் அடியாரிடத்திலே பதிந்திருக்கின்றது என்று அருளிச் செய்தார்.

இந்தச் சங்கம பக்தி வலிமையைக் கண்ட பரமசிவனார் விறன்மிண்ட நாயனாரைத் தம்மைச் சேவிக்கின்ற கணங்களுக்குத் தலைவராக்கியருளினார்.

இச்சங்கம வழிபாடு முதன்மையானது என்று விறன்மிண்ட நாயனார் வன்றொண்டருக்கு உணர்த்தியதனாலேயே திருத் தொண்டத் தொகை என்னும் பதிகம் எழுந்தது. அதனை நாம் தினமும் பாராயணம் பண்ணி இறையருள் பெற்று உய்தியடைவோமாக.

7ம் பக்கம் பார்க்க.....

சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு -422

மனத்தை அது சென்ற இடமெல்லாம் செல்லவிடாமல், தீமையிலிருந்து நீக்கி நன்மை வழியில் செலுத்துவதே அறிவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம் பக்க தொடர்ச்சி....

- தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப் பொருளுக் கடியேன்
விரி பொழில் சூழ் குன்றை யார் விறன் மிண்டர்க் கடியேன்
அல்லி மென் முல்லையந்தார் அமர் நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே

- பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே



ம் பக்க தொடர்ச்சி....

ஏனைய பக்க சாத்திரங்கள் முழுமைய உடலெங்கும் செடில் பாய்ச்சிக் காவடி எடுத்துவரும் காட்சி மெய்ச் சிலிர்ப்பச் செய்யும். தூக்குக் காவடி என்பது அந்தரத்தில் காவடி எடுத்து வருவது பக்தனுடைய உடலில் ஊசிகள் குத்தப்பட்டு அவர் அந்தரத்தில் வருவது அவருடைய பக்தி வைராக்கியத்தையே காட்டுகின்றது. முட்கள் பதித்த மிதியடிகளைப் பாதங்களில் அணிந்து கொண்டு வருவது. இம்மூன்று மிதியடியோடு காவடி சுமந்து வருவது. என்பன பார்ப்பவர்களைப் பரவசப்படுத்துவன. இப்படி வேறு வேறு வகைப்பட்ட காவடி ஆட்டங்களை சந்நிதி முருகன் ஆலயத்தில் கண்டு களிக்கலாம்.

சந்நிதியில் குடி கொண்டிருக்கும் வேலவன் தன்னை நம்பி வந்தவர்கள் அருட் செல்வம், பொருட் செல்வம், புத்திரப்பேறு என எதை வேண்டுகிறார்களோ அதனை நல்குபவன் ஆடம்பரமற்ற, எளிமைக் கோலத்துடன் வீற்றிருக்கும் அவன் பாதங்களைப் பணிந்து நாமும் நன்மைகளைப் பெறுவோம்.

மண்டலத் தோர்கள் செய்த பாவம் மன்னனைச் சாரும்
கண்டிடும் மன்னர் செய்த தீங்கு மந்திரியைச் சேரும்
தொண்டர்கள் செய்த தோஷம் தொடர்ந்திடும் குருவைச்
சேரும்
வண்டுலா மொழியாள் செய்த வன்பழி கணவர்க் காமே.

உலகத்தவர்கள் செய்தபாவம் அரசனைச் சாரும். வலிமையுள்ள அரசர்கள் செய்த தீமை அமைச்சரைச் சேரும். அடியார்கள் செய்த குற்றம் தம் ஆசிரியனைப் பற்றும். கற்கண்டு போலும் மொழியையுடைய மங்கையர்கள் செய்தபாவம் கணவர்களுக்காகும்.

மந்திர முடைய வேந்தனை நயந்து சேவித்தல் ஒன்று
பொற்புடை மகளிரோடு பொருந்தியே வாழ்தல் ஒன்று
பற்பலரோடு நன்னூல் பார்த்து வாசித்தல் ஒன்று
சொற்பெறு மிவைகள் மூன்றும் சொர்க்கத்து வாழ்வதாமே.

நல்ல குணமுடைய அரசர்களை விரும்பித் தரிசித்தலும், அழகுடைய பெண்களோடு கூடி வாழ்தலும் கல்விமான்களான நல்லாசிரியரை அடுத்துத் தன்னையொத்த மாணாக்கர் பலரோடு நல்ல நூல்களைக் கேட்டுச் சந்தேகமறப் பயின்று கற்றுக் கொள்ளுதலாகிய இந்த மூன்று காரியங்களும் இகத்தில் அநுபவிக்கத்தக்க சுவர்க்க போகங்களாம்.

- விவேக சிந்தாமணி -

Not to permit (the mind) to go where it lists, to keep it from evil, and to employ it in good, this is wisdom.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வச்சந்நிதி முருகன்

## திரு ஊஞ்சல்

பொன்னுலகை மன்னவற்குப் பூங்கா விதெருளும்
முன்னவனை ஆனை முகத்தவனை - மன்னுடைய
தீந் தொழிலகல நீக்கிய சிந்தைதனில்
உறைந்து வைத்தருளல் ? நல்ல கடன்

பொன் பொருந்தும் தென்கதிரைப் பதியோ டொன்றும்
புகழ் பொருந்தும் தொண்டர் வேலவன் பதியாம்
மின் பொருந்தும் செங்கதிரைக் கந்தன் தன்மேல்
விந்தை பெறும் அன்ன ஊஞ்சல் விரும்பிப் பாட
மை பொருந்தும் கொன்றையணி மங்கை பாகன் மைந்தனொடு
சற்று விரிந்து படம் தாங்கும்
கொன் பொருந்தும் சிந்துர மாமுகன் கழலோனை
குலைபொம் கலை பதிசூழ் தும்பி போமே

திருமருவுபுனர் இருபுரமும் மேவும் செல்வச்சந்நிதியில்
சந்நிதியில் சிறந்து மேவும்
உருமருவு ஓங்காரத்து முகத்தவனாகும் உத்தமன்மேல்
ஊஞ்சலிசை உவந்து பாட
மருமருவும் மலர்மாலை மதியமொடு வைத்து
சடை உத்தமனார் மகிழ் விளைந்த
கருமருவு மும்மதத்துக் கும்பகும்ப கணபதியை
எந்நாளும் கருது வோமே

நாகமுறும் ஓங்காரக் கோயில் மூட்டி
நம்புமகா மேருவைப்போல் தம்பம் நாட்டி
சோதிமிகு பாதுகைக் வளையைப் பூட்டி
ஆங்கு கதிர்காங்கு கரவைத்தைப் பூட்டி
பூசுமாம் மாதுசிறந்தும் பொற்பலகை யிட்டு
புட்ப சயனம் பரப்பி பூதலர்க்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத விதிப்படி ஏறிஆடு ஊஞ்சல்

வேதநாயக முருகவா ஆடு ஊஞ்சல்

நகர உகரங்கள் இரு தூணதாக

நால்வேத ஓங்காரம் வளையமதாக

மகர அகரம் புரிந்த கயிறதாக

பன்னிரு ரீங்காரம் பலகையாக

சிகரமொடு தகரமும் அடியார் பாட

செல்வமின்னார் சந்நிதியில் சிறந்துமேவி

அகர முதலானவரே ஆடு ஊஞ்சல்

ஆறுமுக ஆண்டவரே ஆடு ஊஞ்சல்

வரை மலை எட்டுமிரு தம்பமாக

வண்ணமுறும் ஆகாயம் வளையமதாக

விட்டமுறும் உலகமது பலகையாக

வீரமணி வாசுகியோ கயிறதாக

சித்தர் இருபாங்கிலும் தொட்டிட ஆட

சின்னவளைச் சந்நிதியில் சிறந்து மேவும்

அட்டதிக்கும் கொண்டாட ஆடு ஊஞ்சல்

ஆறுமுக ஆண்டவரே ஆடு ஊஞ்சல்

தேவர் முனிவோர்கள் வடம் தொட்டிட ஆட

சித்தர்கின்னரர் கருடர்கள் சேர்ந்துபாட

பூமடந்தை நாமடந்தை அலைமகளோர் தேட

பொன்னுலகு மன்னனுடன் புகழ்ந்து கூட

தேன் மொழிசேர் இருவருடன் அன்பு கூர

சின்னவளைச் சந்நிதியில் சிறந்துமேவி

கோமளஞ்சேர் ஆறுமுகா ஆடு ஊஞ்சல்

குறக்கொடிக்கு நாயகரே ஆடு ஊஞ்சல்

வாமமுறு வாரணத்தின் பிள்ளை போல

மற்றவலப் பக்கத்தில் வல்லி போல

ஏகமுகன் இந்திரனும் கவரி சாய்ப்ப

இமையவர்கள் அடிப்பணிந்து ஏத்தி நிற்க

To discern the truth in everything, by whomsoever spoken, this is wisdom.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோமுறைசேர் இருஷிகளும் குடைக ளேந்த

குலவுசின்னச் சந்நிதியில் குழந்தையான

வேலவனார் வேலவரே ஆடீர் ஊஞ்சல்

வேதநாயக முதல்வா ஆடீர் ஊஞ்சல்

முக்கோட முடியாட மாலை யாட

முண்டகத்தோய் செய்யகரும் குண்டலங்களாட

பக்தரும் பருவில் செறி ஓடை யாட

வள்ளியை செறிவாகு வடிவாங்களாட

கர்த்தாவின் காற்சிலம்பு கலீரென் றாட

கருதுசின்னச் சந்நிதியில் கருணையான

வித்தகா போதகுருவே ஆடீர் ஊஞ்சல்

விராலி மலைக்கிறைவா ஆடீர் ஊஞ்சல்

கருணைசெறி ஆறுமுகா கார்த்தி கேயா

கங்கைமருள் காங்கேயா கருணைநேயா

பொருள்சேர் தொழும் மந்திர தந்திர சொந்தகந்தா

புனிதனையே சிறுவர்களும் போற்றுவோர்கள்

வருவினைமுறு நாள்கிழமை கோள்கள் வீழ்ந்து

வருணைமுறு சின்னச்சந்நிதியில் வாழும்

அருளை வடிவேற் கரத்தாய் ஆடீர் ஊஞ்சல்

ஆறுமுக ஆண்டவரே ஆடீர் ஊஞ்சல்

வாழி

மருவேறு சிவனாரும் உமையும் வாழி

வைக்கு திருநீறு சிவனடியும் வாழி

ஒருமேவு அரசர் மனுநீதி வாழி

உலகுயிர் பரவுசெல் வேலவ வாழி

கருமேவு முகில் வாழி கடலும் வாழி

கற்றறிய அடியேன் பொருந்துமிதை

திருமேவு சேவலும் மயிலும் வாழி

சின்னச் சந்நிதி முருகர் வாழியவே.

எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு 424

அரிய பொருள்களையும் எளிய முறையில் விளங்குமாறு சொல்லி, தான் மற்றும் பிறரிடம் கேட்கும் அரும்பொருட்களின் நுண்பொருள்களை ஊன்றி அறிந்து கொள்வது அறிவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்களம்

மங்களம் ஜெய மங்களம் நித்திய சுப மங்களம்

ஆறுமுகனார்க்கு மங்களம் எங்கள் ஆறிரண்டு கையருக்கு மங்களம்

செங்கலை நாதருக்கு மங்களம் செல்வச் சந்நிதியாம் முருகருக்கு மங்களம்

விராலி வீரருக்கு மங்களம் நல்லையில் மயில் வாகனருக்கு மங்களம்

சோதிவடி வேலருக்கு மங்களம் சிவசுப்பிர மணியருக்கு மங்களம்

## எச்சரிக்கை

கருணாகரப் பெருமானே கணபதியே எச்சரிக்கை

கதிராபுரி வருமேவிய கந்தா எச்சரிக்கை

கந்தா செல்வா கரமேவிய கருணா எச்சரிக்கை

எட்டுக்குடியர் திருக்குடிகொண்ட வள்ளிகா எச்சரிக்கை

வள்ளிகா செட்டிகுமார கார்த்திகேசா எச்சரிக்கை

வருவார் ரிவளிருக்கிய முருகா எச்சரிக்கை

முருகா அரியமருகா ஆறுமுகனே எச்சரிக்கை

கருணையா துதிக்கும் எங்கள் கந்தா எச்சரிக்கை

கந்தா கடம்பவனிதா திருக்குமரிகா சுப்பிரமண்யா

எத்தாலிய வேதம் மருகந்தா எச்சரிக்கை

கதிரமலைக் காசிசைனும் கருணைச் சிறுவைக்கா லே

அழகிய சிங்காரா ஆறுமுகனே எச்சரிக்கை

## பராக்கு

சந்திமுகக் கதம்பமுருகன் கதிர் பராக்கு

கந்தா முனைவருக்க தேர்க்கொடுக்கொம்பா பராக்கு

கதிரமலை தனில்வாழ்ந்த கந்தா பராக்கு

போதனைதனை பகர்ந்த புலவா பராக்கு

புள்ளியமயில் ஏறிவரும் புனிதா பராக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவப்பிரகாசம்

மட்டுவில் ஆ. நடராசா

பற்றிடும் கருவி யாவும் பார்த்துணர் வளிக்குங் காலை
உற்றிடு மிடைய தொன்றின் உணர்வினின் உண்மை யாகும்
மற்றது பகல் விளக்கின் மாய்ந்திட வருவ துண்டேல்
பெற்றிடும் அதனை மாயப் பிறப்பினை அறுக்க லாமே.

இ-ள்: பற்றிடும் கருவி யாவும் பார்த்து உணர்வு அளிக்கும் காலை - விடயங்களைப் பற்றுகின்ற கருவிகள் எல்லாம் தத்தம் விடயங்களிற் சென்று ஆன்மாவுக்கு அறிவைக் கொடுக்குங் காலத்து, ஒன்றின் உற்று அறிந்திடுவது உணர்வின் உண்மையாகும் - அவற்றில் ஒரு விடயத்தைப் பொருந்தி அதைப் பற்றி அறிவது ஆன்ம போதத்தின் இயல்பாகும், அது பகல் விளக்கின் மாய்ந்திட வருவது உண்டேல் - அவ்வான்ம போதம் பகற்காலத்து விளக்கைப் போலச் சீவியாது நிற்கும் முறைமை கூடுமாயின், அதனைப் பெற்றிடும் - அப்போது சிவத்தை அடையும், மாயப் பிறப்பினை அறுக்கலாமே - சிவத்தை அடைதலினால் மயக்கத்தைச் செய்யும் பிறவியை அறுக்கலாம் எ-று

பற்றிடுங் கருவி - ஞானேந்திரியம்.

பகல் விளக்குத் தான் கெடாது தன்னொளி கெட்டு நிற்பது போல தான் கெடாது ஆன்மா தற்போதம் கெட்டு நிற்க வருவது அரிதாகலின் அதைக் குறிப்பிடுவதற்காக 'பகல் விளக்கின் மாய்ந்திட வருவதுண்டேல்' என்றார்.

முந்திய முறைமை யாலே மொழிந்தனை கேட்டல் கேட்டல்
சிந்தனை செய்தல் உண்மை தெளிந்திடல் அதுதா னாக
வந்தனை நெறியிற் நிட்டை மருவுதல் என்று நான்காம்
இந்தவா றணைந்தோர் முத்தி எய்திய இயல்பி னோரே

இ-ள்: முந்திய முறைமையாலே - முற்பிறவிகளிற் செய்த சரியை கிரியா யோகங்களால் உண்டான முறைமைப் பாட்டினாலே, மொழிந்தனை கேட்டல் - ஆசிரியர் கூறும் உபதேச மொழிகளைக் கேட்டல், கேட்டல் சிந்தனை செய்தல் - கேட்டவற்றைப் பற்றிச் சிந்தித்தல், உண்மை தெளிந்திடல் - உபதேசிக்கப்பட்ட உண்மையைத் தெளிவாக அறிதல், தான் அதுவாக வந்தவாறு எய்தல் நிட்டை மருவுதல் - தான் சிவமாக வேண்டி ஆசாரியரது உபதேச மொழியினைக் கடைப்பிடித்து முறையிற் பொருந்தி நிட்டை கூடுதல், என்று நான்காம் - என்று சிவத்தை அடையும் முறைமை நான்கு விதமாகும், இந்தவாறு அணைந்தோர் முத்தி எய்திய இயல்பினோர் - இவ்வாறு கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடியோர் முத்திபெற்ற இயல்பினையுடையோர் எ-று.

அது - சிவம் தான் - ஆன்மா

அது தானாக வந்தவாறு எய்தல் என்பதற்கு, சிவம் உயிரோடு அத்துவிதப் பட்டிருப்பது போல் உயிர் சிவத்தோடு அத்துவிதப் படுதல் எனப் பொருள் கூறினும் பொருந்தும்.

கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடுதல் என்னும் நான்கும் முறையே ஞானத்திற் சரியை, ஞானத்திற் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் எனவும் கூறப்படும்.

கேட்டல் நின்மல சாக்கிரமெனவும், கேட்டதைப் பற்றுதல் நின்மல சொப்பனம் எனவும், சிந்தித்தல் நின்மல சுழுத்தி எனவும், தெளிதல் நின்மல துரியமெனவும், நிட்டை கூடுதல் நின்மல துரியாதீதம் எனவும் சொல்லப்படும்.

[illegible] 435

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞான நிட்டை

பாசமா ஞானத் தாலும் பசுவெனு ஞானத் தாலும்
ஈசனை அறிய வொண்ணா திறை அருள் ஞானம்
நண்ணித்
தேசுறும் அதனால் முன்னைச் சிற்றறி வொழிந்து
சேர்ந்து
நேசமோ டுயர்பரத்து நிற்பது ஞான நிட்டை.

இ-ள்: பாசமா ஞானத்தாலும் - பாசமாகிய கருவிகளால் ஆன்மாவுக்குண்டாகும் பாச ஞானத்தாலும், பசு என் ஞானத்தாலும் - கருவிகள் நீங்கிய நிலையில் தோன்றுவதும் விரிந்த 'அகம் பிரமம்' என்னும் பசு ஞானத்தாலும், ஈசனை அறிய ஒண்ணாது - சிவனை அறிய முடியாது. இறை அருள் ஞானம் நண்ணி - சிவனுடைய திருவருளாகிய ஞானத்தைப் பெற்றுத் தேசு உறும் அதனால் முன்னைச் சிற்றறிவு ஒழிந்து - ஒளி பொருந்திய அந்தச் சிவஞானத்தால் பழைய சிற்றறிவு நீங்கப் பெற்று, சேர்ந்து - திருவருளைப் பொருந்தி, நேசமோடு உயர் பரத்து நிற்பது ஞானநிட்டை - அன்போடு அந்த ஞானத்துக்கு மேலான சிவத்தோடும் அத்துவிதமாய்க் கூடி நிற்பது ஞான நிட்டையாகும். எ-று.

பாச ஞானமாவது சொல்லும் பொருளுமாகிய இருவகைப் பிரபஞ்சங்களின் வழியாக ஆன்மாவுக்குண்டாகும் அறிவு.

பாசங்களின் இயல்பையும், அவை தனக்கு அன்னியமானவை என்பதையும் தனக்குக் கீழ்ப்பட்டவை என்பதையும் தான் அவற்றுக்கு மேலானவன் என்பதையும் உயிர் உணரும் போதுண்டாகும் 'நான் பிரமம்' என்னும் ஞானம் பசுஞானம் எனப்படும்.

இறையருள் ஞானம் - இறைவனது திருவருளாகிய ஞானம். இப்பதி ஞானத்தாலேயே சிவனை அறியலாம்.

கருவிகளோடு கூடிய பெத்த நிலையில் ஆன்மாவின் அறிவிச்சை செயல்கள் தொழிற்படுவது போல் முத்தி நிலையிலும் தொழிற்படும். முதல்வன் தன்னோடு அத்துவிதமாய்க் கலந்து நின்று காட்டியும் கண்டும் உபகரிக்கும். கருணையை நோக்குதல் அறிவின் தொழில். அக்கருணையை நோக்கும் போது ஆன்மாவுக்கு அம்முதல்வன் மீது இச்சை அதிகரிக்கும். இது இச்சையின் தொழில். இச்சை காரணமாகச் சிவானந்தத்தை அனுபவித்தல் கிரியையின் தொழில்.

இறைவனின் கருணையை நோக்குதல் காரணமாக அவன் மீது இச்சையுண்டாகும். அவ்விச்சை காரணமாய்ச் சிவானந்தானுபவம் உண்டாகும். அதனால் அறிவிச்சை செயல்களின் நடுவில் நிற்கும் இச்சையைப் பற்றிக் கூறவே இச்சைக்குக் காரணமாகிய அறிவின் தொழிலையும் இச்சை காரணமாகச் சிவானந்தத்தை அனுபவித்தலாகிய கிரியையின் தொழிலையும் கூறியதாதல் காண்க. இக்கருத்துப் பற்றியே 'நேச மோடுயர் பரத்து நிற்பது ஞான நிட்டை' என்றார்.

## உபாய நிட்டை

விளம்பிய வகையின் நிட்டை மேவிடல் அரிதேல்
முன்னம்
அளந்துணர் வளித்த வற்றின் அளவைநற் றவத்தி
னாலே
உளங் கொளுந் தனையு முன்ன படியுமுற்
றுணர்ந்து கொள்ளே
கனிந்திடா ஒழுங்க மற்றத் தன்மையா தாதற்
காமே.

இ-ள்: விளம்பிய வகையின் நிட்டை மேவிடல் அரிதேல் - முன்னர்க் கூறிய முறையிலே நிட்டை கூடுதல் முடியாதாயின், முன்னம் அளந்து உணர்வு அளித்தவற்றின் அளவும் - முன்பு பெத்தநிலையில் விடயங்களை அளந்து ஆன்மாவுக்கு அறிவித்த தத்துவங்களின் இயல்பினையும், அவற்றினாலே உளங் கொளும் தனையும்

To secure the friendship of the great is true wisdom; it is (also) wisdom to keep (that) friendship unchanged, and) not opening and closing (like the lotus flower).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தத்துவங்களினாலே அறியும் ஆன்மாவாகிய தன்னியல்பையும், உள்ளபடியும் - சிவன் தன்னோடு அத்துவிதப் பட்டிருக்கும் உண்மையினையும், உற்று உணர்ந்து - திருவருளைக் கூடி நின்று அறிந்து, தளர்ந்திடாது செல்லவே உலகை - அத்துவித நிலையை மறவாது அதில் உறுதியாக நின்று சிவத்தை விரும்ப, அத்தன்மையது ஆகும் - முன்பு சொன்ன நிட்டையின் இயல்பு உண்டாகும். எ - று.

## அவாத்தறுதல் - அறிதல்

இறைவன் ஆன்மாவோடு ஒருங்கி கலந்து நின்று, அதற்குப்பெத்தம் முத்தி இரண் டிலும் விடயங்களை அறிவித்தும் அறிந்தும் வருவன். இவ்வாறு இறைவன் அத்துவிதமாய் நின்று உபகரித்தலை உணர்ந்து அவ்வுபகாரத்தை மறவாது உறுதியாக அவனிடத்து அன்பு செலுத்துதலால் அவ்வாளனாவுக்கு நிட்டையின் முறைமை கைகூடும் என்பதை உள்ளபடி முற்றுணர்ந்து செல்லவே தளர்ந்திடாதுவப்ப மாறாத் தன்மைய ஆகும் என்பதாம்.

பாவிக்கின் மனாதி வேண்டும் பாவனை கரணம்

நீக்குப்

பாவிப்பவன் நல்லில் என்ன பழுதுள பாவ கத்தால் பாவிக்க ஒண்ணா சிவன்று பாவிப்பவன் என்னின்

சிவன்

பாவிக்க வேண்டா அவன் பரனருள் பற்றி னோர்க்கே.

இ-ள்: பாவிக்கின் மனாதி வேண்டும்- பாவனை செய்வதற்கு மனம் முதலிய கருவிகள் வேண்டும். பயன் இலை- சிவன் மனம் முதலிய கருவிகளுக்கு எட்டாதவனாகையால் அவனைக் கருவிகளோடு கூடிநின்று பாவனை செய்வதால் பயனில்லை, கரணம் நீத்துப் பாவிப்பவன் என்னில் கருவிகளை நீக்கி நின்று சிவத்தைப் பாவனை செய்வேன் என்று நீ சொன்னால், என்ன - நீ செய்யும் பாவனை எத்தகையது. பழுது உள - கருவிகளை நீக்கிய போது மலம் மறைக்கு மாதலால் அப் பாவனையாற் பிரயோசனம் இல்லை. பாவகத்தால் பாவிக்க ஒண்ணான் என்று பாவிப்பன் என்னில் - சிவன் பாவனைக்கு எட்டாதவன் என்று பாவிப்பன் என்னில். நீ என்- நீ செய்யும் பாவனை யாது? அது போலிப் பாவனையாகும். ஆகவே பரன் அருள் பற்றினோர்க்கே - தலைமை ஆகிய சிவனது அருளைப் பற்றினவர்களுக்கு, பாவிக்க வேண்டாம் - பாவனை செய்ய வேண்டியதில்லை. அவ்வருளே சிவத்தை அடைவிக்கும் எ-று.

இங்ஙனம் அவ்வருளே சிவத்தை அடைவிக்கும் என்பது குறிப்பாற்பெறப்பட்டது. இச் செய்யுளில் யோக நூலார் கூறும் பாவனைகள் மூன்று குறிப்பிடப்படுகின்றன. அவை:-

1. மனம் முதலிய கருவிகளோடு கூடி நின்று பாவித்தல். இறைவன் மனத்துக்கு எட்டாதவனாகையால் அப்பாவனையாற் பயனில்லை.

2. கருவிகளை நீங்கி நின்று பாவித்தல். கருவிகள் நீங்கிய போது [illegible] அறியாதநிலையாதலால் அப்பாவனையாற் பிரயோசனம் இல்லை.

3. சிவன் பாவனைக்கு எட்டாதவன் என்று பாவித்தல். இது போலிப் பாவனையாகும்.

எனவே மேற்கூறிய பாவனைகளுக்கு எட்டாத சிவன் அவனருளால் மாத்திரம் அறியப்படுவான் என்பது கருத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலோபம்

-திருமுருக கிருபானந்தவாரியார்-

மனிதனிடமுள்ள தீய குணங்களில் மிகவும் கொடிய துலோபமாகிய தீக்குணம் உலோபம். ஒருவனிடத்தில் ஆயிரம் நற்குணங்கள் இருந்து, உலோப குணமும் உடன் இருக்குமாயின், அத்தனை நற்குணங்களையும் கீழே அழுத்தி, உலோப குணம் மேல் நின்று அவனை உலகம் பழிக்கச் செய்யும்.

தாடகை என்ற கொடிய அரக்கி ஒருத்தியே, வளமையான மருதவனம் முழுவதையும் அழித்துவிட்டாளாம். அது எதுபோல்? உலோப குணம் ஒன்றே சகல நற்குணங்களையும் அழிப்பது போலவாகும்.

இதனைக் கம்ப நாடர் மிக அழகாகத் தமக்கே உரிய அரிய இனிய தமிழால் கூறுகின்றார்.

ஈவரும் பிணிப்புறா உலோபம் ஒன்றுமே
அளப்பருங் குணங்களை அழிக்கு மாறுபோல்
கிளப்பருங் கொடுமைய அரக்கி கேடிலா
வளப்பருங் மருதவனைப் பழித்து மாற்றினாள்

காளாவி ஓங்கி வளமையான் வளர்ந்துள்ள மூங்கில் காட்டில் நெருப்புத் தோன்றி, அவ்வளமை மிக்க மூங்கில் வனத்தை அழிப்பது போல, ஒருவனிடத்திலே தோன்றிய உலோபம், அவனை முழுவதும் அழித்துவிடும்.

உலோப குணம் ஒன்றினாலே அரசன் அழிந்தவன் துரியோதனன்.

ஐம்பி உலகளந்த உத்தமன் - கண்ணபிரான், கையேந்தி ஐந்து வீடுகள் மட்டும் கேட்டார்.

ஆடம்பரமாக வேடமிட்டு செங்கல் வைத்து உறுத்துப் போல மூங்கிலை மேலே போட்டு ஓடு வேய்ந்து ஐந்து வீடுகளை அமைத்துக் கொடுத்திருந்தால், அவன் குலத்துடன் அழிந்திருக்க மாட்டான். பாதி ராஜ்யம் தரக் கடமைப்பட்ட அவன் ஐந்து வீடு தந்திருக்கலாந்தானே? அந்த மூடன் உலோப குணத்தால் "ஊசி குத்துமிடம் இடமேனும் தர மாட்டேன்" என்றான். அதனால் அழிந்தான். அவன் மட்டுமா மாண்டான்? ஒரு அக்ரோணி சேனை (2,18,700) இரண்டு இலட்சத்துப் பதினெண்ணாயிரத்து எழுநூறு வீரர்கள் கொண்டது. இத்தகைய எண்ணிக்கையுடைய பதினொரு அக்ரோணி சேனைகளுடனும், உடன்பிறந்த தொண்ணூற்றொன்பது தம்பியருடனும், தன் உறவினருடனும் மாய்ந்தான். என்ன அவலம்! ஐந்து சிறு வீடுகளைத் தந்திருந்தால் இந்த அழிவு அவனுக்கு வந்திராது அல்லவா?

எனவே, நற்குணங்கள் எத்தனை எத்தனை பெருப்பினும், உலோப குணம் இருப்பின், அக்குணம் நற்குணங்களையும் அழுத்தி, அவனை அடியுடன் அழிக்கும்.

நன்கு செந்தமிழ்ச் சேர்ந்த புலவர் ஒருவர், மூத்த நாகப்பன் என்ற பெருந் தனவந்தனிடம் போனார். வந்தவரை 'வாரும், இரும், உணவு அருந்தும்' என்று கூறாமல் ஒரு குவளை தண்ணீரும் தராமல், அந்த உலோபி அவரை அசட்டை செய்தான். உடனே புலவர் பெருமானுக்குச் சீற்றம் பொங்கியது. அவர் வாயிலிருந்து ஒரு தமிழ்க் கவி வெளி வந்தது. அது தான் இது:

உரகத்திலே கிடப்பான் சக்ரபாணி உயர்ந்த கும்ப
கலசத்திலே கிடப்பான் குடமுனி கன்னியர்கள்
விரகத்திலே கிடப்பான் காமுகன் மிகுந்த கலியு
நரகத்திலே கிடப்பான் கொடுமிறுக்கு
நாகப்பனே.

இனி ஒருவனிடத்தில் ஆயிரம் ஆயிரம் தீக்குணங்கள் இருந்து, அள்ளி வழங்கும் வள்ளன்மை என்ற ஒரு நற்குணம் இருக்குமாயின், அத்தனை தீக்குணங்களையும் வெளிக்காட்டாமல், கருணைக் குணம் மேலோங்கி நின்று அவனுக்குப்

To live as the world lives, this is wisdom.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ் தேடிக் கொடுக்கும். பொன்னையும், பொருளையும், நிலங்களையும், தோட்டங்களையும் வறியவர்க்கு வழங்கியவர்கள் பலர். பாரி முந்நூறு கிராமங்களைப் பரிசிலாகவும் தந்தான். தன் பொற்றேரை முல்லைக் கொடிக்கு ஈந்தவன்.

தனக்கு அதி இனியமான பொருள்களைக் கொடுப்பது மிகவும் இசையும். ஆனால் தான் இனிது வளர்த்த உடம்பைத் தரமனம் இசையாது. புறாவை அடைக்கலம் புகுந்த, கேவலம் ஒரு புறாவுக்காய் சிபி என்ற வேந்தன், தன் உடலின் தசைகளை அரிந்து அறுப்புத்துலையில் வைத்துத் தானே அத்துலையில் ஏறினான். இந்த வள்ளன்மையைக் கண்டு இமையவர் வியந்தனர்.

'என்றுஞ் சிறப்பின் இமையவர் வியப்ப
உடம்புறு துண்ணென் கீர்த்தோன்'

என்று மணிமேகலை சிறப்பித்துக் கூறியவர்

இதனினும் மேலாய ஒருவர் செய்தார். அவரை நாம் எங்கே சிந்திக்கின்றோம்? ஆ! ஆ! எத்துணைப் பெரிய தியாகம்!

அன்புக்கு உறைவிடமான ததீசி முனிவர், அமரர்களுக்கு என்றும் அழியாப் புகழ் பெற்றார்.

ததீசி முனிவர் தம் உடம்பை ஒருபொருளாக மதித்தாரில்லை. பாலுந் தேனும் பழமும் பாயாசமும் வேளை தவறாமல் உண்டு இந்த உடம்பை வளர்க்கின்றோம். விதம் விதமான ஆடைகள், பளபளக்கும் அணிகலன்கள், எத்தனை அழகுகள் செய்து நிலைக்கண்ணாடியில் கண்டு களிக்கின்றோம். இவ்வுடம்பை நம்முடையதென்று நாம் எண்ணுகின்றோம். அதே நேரத்தில் இதனை நாய் நமது என்று கழுகின்றது; நரி நமது என்று நவில்கின்றது; இயமன் என்னது என்று இயம்புகின்றான்; பேயும் நோயும் தமது என்று கூறுகின்றன. ஆதலால் இவ்வுடம்பு யாருக்குச் சொந்தம்?

தாய்நம தெவ்வுரு நமதிது என்பிரா
ஞாய்நம தென்றுநாய் கழுகிது என்பினி
பேய்நம தென்றுமண் புசிக்கும் பெற்றிபோ
லாய்நம தென்றிடும் யாக்கை யாருதே?

தருக்கனா விளர்தலை தமியக் குன்றுதோள்
அருக்கன் வருந்திரு சிவைய யாக்கையைக்
கொடுக்கலா அமரர்கள் கொள்ள வேண்டின்
அடுக்குமாக் கையின் பயன் இதனின் யாவதே?

என்று, ததீசி முனிவர் இனியவை சொல்லி, உவந்து அன்புடன் உடலை உதவினார்.

இதனைத்தான் திருவள்ளுவர்,

'அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு'

என்று கூறியருளினார். இத்திருக்குறளில் ததீசி முனிவர் இமையவர்க்குத் தமது முதுகு எலும்பை வழங்கிய குறிப்புளது. ததீசி முனிவர் தமது முதுகு எலும்பை இந்திரன் வஜ்ராயுதமாகச் செய்து, அசுரரை வென்று பெருமையுடன் வாழ்ந்தான்.

கொடைக்குணம் பல தீமைகளை மறைத்துவிடும் என்று முன்னே சிந்தித்தோம். உடம்பிலே உள்ள படை, சொறி முதலிய குற்றம் குறைகளை ஒரு பட்டுச்சால்வை மறைத்து விடுமாப்போல், தீமைகள் யாவையும் கொடை குணம் மறைத்துவிடும் என்பதற்குச் சான்றாக நின்றவன் கர்ணன்.

கர்ணன் நல்லவன் அல்லன். துரியோதனன், பாண்டவர்களைப் பல கொடுமைகள் செய்தான். பீமனைக் கயிற்றில் கட்டி கங்கையில் எறிந்தான். தூங்கும்பொழுது அரவினங்களை ஏவிக் கடிப்பித்தான். உண்ணும் உணவில் நஞ்சு கலந்து கொடுத்தான். அரக்கு மாளிகையில் குடியிருக்கும் வீட்டில் கொள்ளி வைத்தான். சூது ஆடினான். மாதுநல்லாளை மானபங்கம் புரிந்தான். இத்தனை கொடுமைகள் செய்த துரியோதனனை, ஒரு

(வளரும்) மர்க்க ...

அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர் - 427

அறிவுடையவர் எதிர்காலத்தில் நிகழக்கூடியதை முன்னதாகவே அறிய வல்லவர். அறிவில்லாதவர் அதனை முன்னதாக அறியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிளக்கிடுதல்.

-சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள்-

ஆலயம் முதலிய சிவ சந்நிதானங்களிலும், பூசையிலும் யாக முதலிய வற்றிலும் விளக்கிடுதல் பணியைத் தொழில்களுள் விசேடித்ததாகச் சொல்லப் பட்டது. தீபமேற்றுபவர்களும், திருந் தாக்குபவர்களும் தீபத்துக்கு நெய் உதவுபவர்களும், பாபம் நீங்கி உண்மைஞான விளக்கம் அடைந்து சிவபெருமானுடைய திருவடியை அடைவார்கள். திருவிளக்கிடுதலாகிய சிவபுண்ணியத்தின் மகிமையை திருநாவுக்கரசு நாயனார்,

பெரும்புலர் காலை மூழ்கிப் பித்தர்க்குப் பத்த ராகி
அரும்பொடு மலர்கள் கொண்டாங் கார்வத்தை யுள்ளே வைத்து
விரும்பிநல் விளக்குத் தூபம் விதியினா லிடவல் லார்க்குக்
கரும்பினிற் கட்டி போல்வார் கடவூர்வீ ரட்ட னாரே

என்னும் திருச்செய்யுளால் உணர்க. மாவலி என்பான் முற்பிறப்பில் எலியாகப்பிறந்து, சிவாலயத்துள்ள விளக்கில் இட்ட திரியை அபுத்திபூர்வமாகத் தீண்டி தூண்டி யெரியச்செய்த காரணத்தாலன்றோ புவனம் மூன்றையும் பொது அறப் புரந்தும் வாழ்வையும் சுற்றும் முத்தியையும் அடைந்தான். இப்படியாயின், புத்திபூர்வமாகத் திருவிளக்கிடுவோர் அடையும் பயன் இவ்வளவினதென்று கூறாமலே உணர்ந்துகொள்ளலாம். மெய்யன்புடன் திருவிளக்கேற்றியவர்களுடைய சரித்திரங்கள் பல உள. நமிநந்தியடிகள் நாயனாருடைய சரித்திரத்தைக் காட்டுவோம்.

சோழநாட்டிலேயுள்ள ஏமப் பேறூரிலே, அந்தணர் குலத்தில் விபூதியே மெய்ப்பொருள் என்று அறியுந்துணிபுடையாரும், சிவபெருமானது திருவடிகளை அல்லும் பகலும் வழிபடுதலே இன்பமாக வுடையவருமாகிய நமிநந்தியடிகள் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் திருவாரூரை அடைந்து வன்மீகநாதரை வணங்கி வருவாராயினார். ஒருநாள் வன்மீகநாதரை வணங்கி எழுந்து பெருவாழ்வடைந்து, பாங்கரிலுள்ள அரநெறியென்னும் ஆலயத்தை அடைந்தார். அடைந்து காதலோடு வணங்கிப் பல திருத்தொண்டுகள் செய்து, எண்ணில்லாத தீபமேற்றுதற்கு விரும்பிய நாயனார், அப்பொழுது மாலைக்காலமாதலால் அப்பால் செல்லும் பொழுது செல்லும் என்று நினைத்துச் சமீபத்தில் ஒரு வீடிருந்தது கண்டு, அது சமணர் வீடென்று அறியாதுபோய் "சிவாலயத்தில் விளக்கேற்றுவதற்கு நெய் தாருங்கள்" என்று கேட்டார். அவர்கள் "கையிலே அக்கினி வைத்திருக்கும் உங்கள் கடவுளுக்கு விளக்கு மிகையாகும். இங்கே நெய் இல்லை. நீரை முகந்து எரியும்" என்று கூறினார்கள். நமிநந்தியடிகள் அதைக்கேட்டுப் பொறாராகி, மனவருத்தத்துடன் சிவனது கோயிலை அடைந்து நமஸ்கரித்தார்.

அப்பொழுது "நமிநந்தியே! நீ உன் மனக்கவலையை நீக்குதி. சமீபத்திலிருக்கின்ற குளத்தில் நீரை முகந்துகொண்டு வந்து விளக்கேற்றுதி" என்றோர் அசரீரி வாக்கு எழுந்தது. அதுகேட்டு நமிநந்தியடிகள், சிந்தை தெளிந்து, திருப்பதங்களைத் துதித்து, குளத்தில் இறங்கி, சிவநாமத்தை உச்சரித்து, நீரை முகந்துகொண்டு கோயிலிலே வந்து, அகலிலே முறுக்கிய திரியில் அந்நீரை வார்த்து, விளக்கேற்றினார். அது சுடர்விட்டெரிந்தது. அதை நோக்கி அவ்வாலயம் நிறைய நடுயாமம் வரையில் நீரினாலே திருவிளக்கேற்றினார். திரு விளக்கு இரவிலே நின்று எரியும்படி, குறைகின்ற அகல்களுக்கெல்லாம் நீர்வார்த்து தமது வீட்டையடைந்து மறுநாட் காலையில் கோயிலுக்கு வந்து, பல திருத்தொண்டுகளைப் பகலிற்செய்து இரவில் திருவிளக்கேற்றுவார். இப்பிரகாரம் திருத்தொண்டுகளைச் செய்திருந்து சிவபெருமானுடைய திருவடிகளை அடைந்தனர்.

The wise are those who know beforehand what will happen; those who do not know this are the unwise.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈவது விலக்கேல்

- க.யோகேஸ்வரி -



பாடசாலையில் இடைவேளை நேரத்திற்கான மணியடித்ததும் மாணவர்கள் தத்தமது சாப்பாட்டுப் பெட்டிகளைத் திறந்து சாப்பிடத் தொடங்கினார்கள். புட்டு, இடியப்பம், ரொட்டி, தோசை என்று விதம்விதமான உணவுகளிலிருந்து வாசனை கிளம்பியது. வகுப்பறையில் மாணவர்கள் சிரிப்பொலியும் சத்தமுமாய் ஒரே ஆரவாரமாக இருந்தது.

சுகன்யா தனது இருக்கையில் இருந்து ஒரு புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தாள். 'என்ன சுகன்யா? இன்று நீ சாப்பாடு கொண்டுவரவில்லையா?' அன்போடு கேட்டாள் தீசா. வசதியான குடும்பத்தில் இருந்து வரும் தீசா இரக்க சுபாவம் உள்ளவள். ஏழைகளைக் கண்டு இரங்குபவள். பிறர் பசித்திருக்க தான் சாப்பிட விரும்பாதவள்.

தீசா அன்பாய் விசாரித்ததும் சுகன்யாவுக்குக் கண்கள் கலங்கிவிட்டன. என்றும் பேசாது மௌனித்திருந்தவள் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. 'என்ன சுகன்யா? ஏன் அழுகிறாய்?' பரிவோடு கேட்டாள் தீசா. 'தீசா எங்களுக்கு இப்போது சரியான கஷ்டம். அப்பாவுக்குத் திடீரென வேலை போய்விட்டது. அம்மாதான் தையல் வேலை செய்து குடும்பத்தை நடத்துகிறார். காலையில் பாடசாலைக்கு வரும்போது கஞ்சி குடித்து விட்டு வந்தேன். பாடசாலையால் போய் உணவு உண்பேன்.' சுகன்யா சொல்லும்போதே நாத்தழுதழுத்தது. பொங்கிவந்த அழுகையை அடக்கிக் கொண்டாள்.

'சுகன்யா அழவேண்டாம். நாளையிலிருந்து நான் உனக்குச் சாப்பாடு கொண்டுவருவேன். நீயும் எங்களோடு சாப்பாட்டு நேரத்தில் சாப்பிடலாம். நீ பசியிருக்க வேண்டாம்.' அன்போடு தீசா கூறினாள். அடுத்தநாள் காலையில் பாடசாலைக்குப் போவதற்கு முன்னமே 'அம்மா... எனக்கு இன்றிலிருந்து சாப்பாடு கூடுதலாக வையுங்கோ. நீங்கள் வைக்கும் சாப்பாடு எனக்கு இப்போ போதுமானதாய் இல்லை. இப்ப எல்லாம் எனக்குச் சரியான பசி' என்று தீசா சொன்னாள்.

எப்பவுமே சாப்பாடு அதிகம் வைக்க வேண்டாம் என்று கூறும் மகள் இப்படிக் கூறியதும் வியப்போடு பார்த்தார் தாயார். தீசாவின் தாயார் சிக்கனமானவள். வேலை செய்யும் வேலைக்காரருக்கே சரியாக உணவு கொடுக்காதவள். சுகன்யாவுக்குச் சாப்பாடு தாங்கோ என்று சொன்னால் என்ன சொல்லிடுவாளோ என்று பயந்துதான் தீசா இப்படிச் சொன்னாள்.

'என்ன தீசா? வைக்கிற உணவே கூடிப்போகுது என்று சொல்லுகிற நீயா இப்படிச் சொல்லுகிறாய்? நீ ஏதோ எனக்கு மறைக்கப் பார்க்கிறாய். உண்மையைச் சொல்லு. உன்னுடைய அம்மாவுக்கு நீ பொய் சொல்லக் கூடாது.' சற்று மிரட்டலாகவே தாயார் சொன்னார்.

'அம்மா என்னுடைய சிநேகிதி சுகன்யா தினமும் நாங்கள் சாப்பிடும் போது சாப்பிடாமல் இருக்கிறாள். அவளுடைய அப்பாவுக்கு வேலை இல்லையாம். வீட்டிலை சரியான கஷ்டமாம்.' பயந்து பயந்து தீசா சொன்னாள். 'சும்மா வாயிலை இருப்பதை எல்லாம் ஏன் வீட்டுக்குக் கொண்டு வருகிறாய்? பிள்ளைகளுக்குச் சாப்பாடு கொடுக்கப் பெற்றோருக்குத் தெரியும். நான் சுகன்யாவுக்குச் சாப்பாடு வைக்கமாட்டேன்.' தாயார் உறுதியாகக் கூறினார்.


மறுபக்கம் பார்க்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினெண் சித்தர்கள்

### ஸ்ரீ வல்லப சித்தர்

Dr. ... B.S.M.S.(India) J.P.



இவரது மறுபெயர் சுந்தரானந்தர் ஆகும். பதினெண் சித்தர்களில் இவரும் ஒருவராவார். வேளாளர் மரபினைச் சேர்ந்தவர். இவர் மதுரையில் சமாதி அடைந்தார். சுந்தரானந்தர் அதிசய சூத்திரம், சுந்தரானந்தர் ஞானசூத்திரம், சுந்தரானந்தர் பூஜாவிதி என்பன இவர் இயற்றிய நூல்களாகும்.

24ம் பக்க தொடர்ச்சி......

முறையேனும் கர்ணன் தடுத்து அறிவுரை பகர்ந்தானில்லை. அக்கொடுமைகள் அனைத்துக்கும் உடன் இருந்து உதவி செய்தான்.

அரசவையில் அபலையாக நின்று அழும் பத்தினியைப்பார்த்து, 'திரௌபதையே! உன் கணவர்கள் அடிமைகளாகி விட்டார்கள். இங்குள்ள மன்னர்களில் ஒருவனை நீ கணவனாக வரித்துக்கொள்' என்று வாய் கூசாமல் கூறினான்.

எனவே, பலபல தீக்குணங்கள் நிறைந்த கர்ணனை உலகம் புகழ்கின்றது. என்ன காரணம்? அவன் வரையாது வழங்கினான். பொன்னும் பொருளும் தந்து அவன் இரு கரங்களும் சிவந்தன. தன் உயிர்க்கு ஆதாரமாக இருந்த கவச குண்டலங்களை ஈந்தான். ஆதலால் கொடைக் குணம், கர்ணனுடைய தீமைகளை மறைத்துவிட்டது.

ஆதலால் பல நற்குணங்களை மறைப்பது, கோபம் பல தீக்குணங்களை மறைப்பது ஈகை. எனவே மக்கள் கோபத்தை விடுத்து, ஈகையை மேற்கொண்டு, புகழும் புண்ணியமும் பெற்று, இகபர நலன்களைப் பெறுவார்களாக.

18ம் பக்க தொடர்ச்சி.....

'அம்மா! சுகன்யா என்னை நம்பி வருவாள். நான் ஏமாத்திப் போட்டேன் என்று நினைப்பாள். நான் கட்டாயம் சாப்பாடு கொண்டு வருவேன் என்று சொல்லிப்போட்டேன்.' சொல்லமுடியாமல் கீதா அழத் தொடங்கினாள். மகளுடைய அழுகைச் சத்தத்தைக் கேட்டு அவ்விடத்திற்கு வந்த கீதாவின் தந்தை 'என்ன பிரச்சினை? ஏன் கீதா அழுகிறாள்' வியப்போடு மனைவியைக் கேட்டார்.

'உங்களுடைய செல்லப்பிள்ளையை என்னவென்று கேளுங்கோ. கொஞ்சமும் பொறுப்பில்லாத பிள்ளை. யாரோ சிநேகிதியாம். தகப்பனுக்கு வேலையில்லையாம். அவளுக்குச் சாப்பாடு தரட்டாம்.' கோபத்தோடு தாயார் முழுவிபரத்தையும் சொன்னார்.

'உன்னுடைய மகள் பிறர் பசித்திருக்கத் தான் சாப்பிட விரும்பாதவள் என்று நீ சந்தோசப்பட வேண்டும். பிள்ளைகளுடைய இரக்க குணத்தை பெற்றோர்கள் வளர்க்க வேண்டும். எங்களுடைய வசதிக்கு ஒரு குழந்தைக்கு ஒரு வேளை சாப்பாடு குடுப்பது கஷ்டமில்லை. நீ நாளையில் இருந்து கீதாவின் சிநேகிதிக்கும் சாப்பாடு குடுத்துவிடும்' அதிகாரத்துடன் தகப்பன் சொன்னார். அப்பாவின் வார்த்தை கீதா காதில் தேனாகப் பாய்ந்தது.

மகள் கொடுப்பதைத் தாய் தடுப்பதை நிறுத்திய தந்தைக்கு 'ஈயாது விலக்கேல்' என்ற ஆத்திசூடி நினைவுக்கு வந்தது. கீதாவின் செய்கை அவருக்குப் பெருமையாக இருந்தது.

Not to fear what ought to be feared, is folly; it is the work of the wise to fear what should be feared.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இதழின் தொடர்ச்சி......

# சைவபூஷணம்

## ஆசிரிய விளக்கம்

57. கருநிற விபூதியைத் தரித்தால் நோயுண்டாகும். செந்நிற விபூதியைத் தரித்தால் கீர்த்தியைப் போக்கும். பொன்னிற விபூதியைத் தரித்தால் ஐஸ்வரியத்தை நீக்கும். வெண்ணிற விபூதியைத் தரித்தால் போகமோக்ஷம் இரண்டும் உண்டாம். இவ்வாறு காமிகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

(அ-கை) உருத்திராக்கம் தரிக்கும் முறையைக் கூறுகின்றார்.

58. உருத்திராக்கம் தரிக்கும் முறை வருமாறு: சிகையிலே ஒரு உருத்திராக்ஷமும், சிரசில் நாற்பது உருத்திராக்ஷமும், காதுகளிலே ஒவ்வொன்றில் ஆறு உருத்திராக்ஷமும், கழுத்தில் முப்பத்திரண்டு உருத்திராக்ஷமும், தோள்களில் ஒவ்வொன்றில் பதினாறு உருத்திராக்ஷமும், மார்பில் நூற்றெட்டு, ஆயிரத்தெட்டு, பதினாயிரத்தெட்டு உருத்திராக்ஷமும், அவ்வாறே சிரமாலையும் தரிக்கவேண்டுமென்று சிவாகமங்களிற் கூறப்பட்டிருக்கின்றன.

(அ-கை) உருத்திராக்ஷம் தரித்தால் உண்டாகும் புண்ணியத்தைக் கூறுகின்றார்.

59. உருத்திராக்ஷத்தைச் சிரசிற் தரித்தால் கோடி புண்ணியம். காதுகளிற் தரித்தால் பத்துக் கோடி புண்ணியம். கழுத்திற் தரித்தால் நூறுகோடி புண்ணியம். மார்பிற் தரித்தால் ஆயிரங்கோடி புண்ணியம். தோள்களிற்றரித்தால் பதினாயிரம் கோடி புண்ணியம். மணிக்கட்டிற்றரித்தால் அனந்தகோடி புண்ணியம். இவ்வாறு சிவாகமங்களிற் கூறப்பட்டிருக்கின்றன. இதற்கு ஸ்மிருதிப் பிரமாணம்.

ஜபமாலையாகும் அக்ஷமாலையை ஜபிக்கும் பொழுது விரல்களில் வைத்துத்தள்ளும் முறைக்கும் ஆகமப்பிரமாணம் வருமாறு: மாலையைப் பெருவிரலால் தள்ளினால் மோக்ஷமும், சுட்டு விரலால் தள்ளினால் சத்துருநாசமும், நடுவிரலால் தள்ளினால் சம்பத்தும், கடைவிரலாலும் அணிவிரலாலும் தள்ளினால் [illegible] சித்திக்குமென்பதாம்.

(அ-கை) சந்தியாவந்தனமுறைமையைக் கூறுகின்றார்.

60. சமயதீக்ஷையுடைய சமயிபாலகன் தியான பிராணாயாமங்களில்லாமல் பதினொரு சம்ஹிதாமந்திரங்களாலும் பிராதக்காலமாவது, மத்தியான காலமாவது ஒரு காலம் அனுஷ்டானஞ் செய்யவேண்டும். மற்றக்காலங்களில் மந்திரமில்லாமல் விபூதியை நீரோடு சேர்த்துத் தரிக்கவேண்டும். சமயம், விசேடம் என்னும் இரண்டு தீக்ஷையுடைய புத்திரனானவன், தியான பிராணாயாமங்களுடனே நீரில்லாமல் விபூதியைத் தரிக்கும் போதெல்லாம் சிவமந்திரத்தால் தரிக்கவேண்டும். இவ்வாறு தரிப்பதுடன் காலை மாலைகளாகிய இரண்டு காலங்களிலும் விபூதியைத் தரித்து அனுஷ்டானமும் செய்யவேண்டும். சமயம், விசேடம், நிருவாணம் என்னும் மூன்று தீக்ஷையையுடைய சாதகனும், அம்மூன்றோடு அபிஷேகத்தையுமுடைய ஆசிரியனும் காலை, உச்சி, மாலை, பாதியிரவு ஆகிய இந்த நான்கு காலங்களிலும் அனுஷ்டானங்கள் செய்யவேண்டும்.

(அ-கை) சைவாநுஷ்டானத்தின் முறையைக் கூறுகின்றார்

(61-62-63) விசேஷ சைவாசாரியர் சிவாலயங்களில் விதிக்கப்பட்ட முறைப்படி செய்யவேண்டும் அநுஷ்டான முறை வருமாறு: விதிப்படி மலநிவர்த்தி செய்துகொண்டு, நீராடி ஆடை தரித்துக் கொண்டு நீருக்குப்

பக்கத்தில் வடக்கு முகமாக வேனும் கிழக்குமுகமாகவேனும் இருந்துகொண்டு சுத்தமான நீரினால் மந்திரத்தோடு ஆசமனஞ்செய்தல், விபூதிஸ்நானம், மானதஸ்நானம் செய்தல், அந்தந்தத்தானங்களில் விபூதி தரித்தல், இரண்டு தரந்தல் ஆசமனஞ்செய்தல், சகளீகரணம், அங்கநியாசஞ் செய்தல், மகாமுத்திரை செய்தல், பிராணாயாமஞ்செய்தல், கேசரீமுத்திரைகள், பிராமிமுதலிய சந்தியைகளின் தியானம், அஸ்திராபிடேகம், அங்கமார்ச்சனம், அகமர்ஷணம், மீள ஆசமனம், சகளீகரணம், ஜலத்தால் அர்க்கியம், காயத்திரி ஜபம், அதற்கு உசிதமான சமர்ப்பணம், சிவகாயத்திரி யெண்ணும் பஞ்செழுத்து மந்திரஜபத்தின் சமர்ப்பணம், சிவமூலதர்ப்பணம், சிவமூலஜபம், ஈசான முதல் சத்தியோஜாதமீறான மந்திரதர்ப்பணம், ஆசமனம், சகளீகரணம், அந்தந்தத்தின் உபஸம்ஹாரம், உத்தராபனம், திக்பந்தனம், சிவசூரியோபஸ்தானம், சிவமந்திர ஜபம், குருவந்தனம், என்பன முறையே செய்தல். இவ்வாறு சைவ சந்தியாவந்தன முறை சிவாகமங்களில் சொல்லப்படுகின்றது.

(அவை) பிராமீ முதலிய நான்கு சந்திகளின் தியானம், தேவதாத்தியானம், என்றும் இவற்றை நான்கு சுலோகங்களாற் கூறுகின்றார்.

(64 65 66 - 67) பிராதக்காலத்துக்குச் சந்தியா தேவதை பிராமீ என்றும், மத்தியான காலத்துக்குச் சந்தியா தேவதை வைஷ்ணவி என்றும், சாயங்காலத்துக்குச் சந்தியா தேவதை ரௌத்திரி என்றும், பாதிராத்திரிக்குச் சந்தியா தேவதை நிஷ்களரூபி என்றும், இவ்வாறு நான்கு தேவதைகளின் பெயரும் அறிந்துகொள்க. அவற்றுள், பிராமி தேவதையின் தியானம் வருமாறு: நான்கு திருமுகமண்டலமும், நான்கு திருக்கரங்களும் உடையதாகவும், வலது பக்கத்தில் சுருக்கும்,அக்ஷமாலையும், இடது பக்கத்தில் தண்டு கமண்டலங்களும் தரித்திருப்பதாகவும், சிவந்த திருமேனியை யுடையதாகவும், சிவந்த பரிவட்டமும், திருவாபரணமும், சிவந்த மாலையுந்தரித்திருப்பதாகவும், எட்டுக்கண்களையுடைய தாகவும், யஞ்ஞோபவீதமும் தரித்துக்கொண்டு ஒரு கோடி யோசனை பிரமாணமுள்ள அன்னத்தின் மேல் பத்மாசனத்தில் மாலையுடன் எழுந்தருளியிருப்பதாகவும், சைவசம்பந்தமான கிரியைகளுக்கு சாக்ஷிபூதையாகவும், தியானஞ் செய்க. இது பிராதக்கால சந்தியாத்தியானமாகும். இனி வைஷ்ணவி தியானம் வருமாறு:- ஒரு திருமுகமண்டலமும் நான்கு திருக்கரங்களும் உடையதாகவும், வலது பக்கத்தில் சங்கமும் அபயமும் இடது பக்கத்தில் சக்கரமும் கதையும் தரித்திருப்பதாகவும், வெள்ளை நிறமுடையதாகவும், வெள்ளைப் பரிவட்டமும், வெள்ளை முத்துமாலையும், வெள்ளை மாலையும், யஞ்ஞோபவீதமும் தரித்திருப்பதாகவும், இரு திருநயனமுடையதாகவும், யௌவனப் பருவமுடையதாகவும், கருடன் மீது பத்மாசனமான இருநூறுகோடி யோசனை பிரமாண மேல் எழுந்தருளியிருப்பதாகவும், வநமாலையை ஆபரணமாக வுடையதாகவும், இருதய மத்தியத்தில் தியானஞ் செய்க. இது மத்தியானகால சந்தியாத்தியானமாகும். இனி, ரௌத்திரி தியானம் வருமாறு: ஒரு திருமுகமண்டலமும், மூன்று திருக்கண்களும், நான்கு திருக்கரங்களும் உடையதாகவும், வலது பக்கத்தில் அக்ஷமாலையும் திரிசூலமும், இடது பக்கத்தில் வேலும் அபயமும் தரித்திருப்பதாகவும், சிறிது பசுமையான திருமேனியும், சாயுங்காலத்தில் பொன்வண்ணமும் சிறிது குமுதவர்ணமும் உடையதாகவும், பச்சைப் பரிவட்டமும், மரகத ஆபரணங்களும் யஞ்ஞோபவீதமும், இளம்பிறையும், கமண்டலமும், மகுடமும், தரித்துக்கொண்டு இடபத்தின் மீது பத்மாசனமாக மூன்று கோடி யோசனை பிரமாண எழுந்தருளியிருப்பதாகவும் பிரமரந்திரத்தில் தியானஞ்செய்க. இது சாயங்கால சந்தியாத்தியானம். நள்யாமக்காலத்துச் சந்தியாத்தியானம் வருமாறு: தாமரைநூலை ஒத்து எங்கும் நிறைந்து பரிபூரணமாயிருக்கின்ற நிஷ்கள காந்தியையுடைய வஸ்துவாகத் தியானம் பண்ணுக. இது நான்காவது நிஷ்கள

No terrifying calamity will happen to the wise, who foresee and guared against coming evils.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தியாத் தியானம். இவ்வாறு நான்கு காலத்துச் சந்தியாதேவதைத் தியானம் கண்டு கொள்க.

(அ-கை) சிவகாயத்திரியைத் தியானிக்கும் முறையைப் பற்றிக் கூறுகின்றார்.

(68) சிவகாயத்திரி தியானம் வருமாறு:-

ஒரு திருமுகமண்டலமும், மூன்று திருநயனமும், நான்கு திருக்கரங்களும் உடையவராயும், வலது பக்கத்தில் அக்கமாலையும், சரப்பிரதான முத்திரையும், இடதுபக்கத்தில் அபய முத்திரையும், தாமரைப்பூவும் தரித்திருப்பதாகவும், சுந்தரியாகவும், வலது காலைக் குறுக்காகமடக்கி இடதுகாலைப் பத்மதளத்தின்மீது நீட்டிச் சுகாசனமாக எழுந்தருளியிருப்பதாகவும், இளம் பிறையோடு கூடிய சடையும், வெள்ளைப்பரி வட்டமும், வெள்ளை மாலையும் நல்ல திவ்விய பரணமும், விபூதியும் திரிபுண்டரமும் தரித்திருப்பதாகவும், ஆதித்யமண்டலத்தில் எழுந்தருளியிருப்பதாகவும் தியானஞ் செய்க.

(அ-கை) ஆசனவிதி கூறுகின்றார்.

வெறும் பூமியிலிருந்தால் துக்கமுண்டாகும், கல்லிலிருந்தால் வியாதியுண்டாகும். புல்லிலிருந்தால் கீர்த்தியுண்டாகும். மரப்பலகையிலிருந்தால் மகாசம்பத்துண்டாகும். மூங்கிற்றட்டிலிருந்தால் அஷ்டதரித்திர முண்டாகும். ஆடையிலிருந்தால் வியாதி நீங்கும். கம்பளத்திலிருந்தால் சௌக்கிய முண்டாகும். புலித் தோலிலிருந்தால் சம்பத்தும் மோக்ஷமுமுண்டாகும். மான் தோலிலிருந்தால் சிவஞானமுண்டாகும். இவ்வாறு பூஜாகால ஜபகாலங்களில் தானிருக்கப் படிய ஆசனமும் பலனும் கண்டு கொள்க. இவ்வாறன்றித் தென்னோலையினா லுண்டானது தாமரையோலையினாலுண்டானது, சக்கையோலையினாலுண்டானது, எருக்கும் இலை முதலான ஆசனங்கள் சில ஆகமங்களிலே ஆகுமென்றும் சொல்லப்பட்டிருக்கின்றன.

# கல் உருகும்

- கி.லோ.ஜகந்நாதன்

என்றும் இளையவனும் இணையில்லா அழகனுமாகிய முருகனை நாம் எப்போது காணப் போகிறோம்? அவன் திருமேனி அழகு முழுவதும் காணும் திறமை உடம்பெல்லாம் கண்ணாகப் படைத்தாலும் உண்டாகாது. அவன் பாதத்தைக் கண்டாலே போதும். மனக் கவலையெல்லாம் போக்கி விடலாம். தனக்கு உவமை இல்லாத முருகனுடைய தாளை மனசிலே தியானித்தால் கவலை தீரும்.

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால் மனக்கவலை மாற்றல் அரிது

என்று திருவள்ளுவர் கூறியிருக்கிறார் அல்லவா?

ஆதலின் மனதிலே முருகனுடைய பாத தாமரையைப் பதித்து விட்டால் எல்லாவிதமான கவலைகளும் போய்விடும். அது சரிதான் ஆனால் அவனுடைய பாத தாமரை மனதிலே பதியுமா? அது தாமரை ஆயிற்றே. அலங்காரமும் அழகும் பொருந்திய அரவிந்த மலரல்லவா அவன் தாள்? நம் மனமோ கல். திண்ணிய கல். கனமான கல். தாமரை நீரில் அல்லவா மலரும்? கல்லிலே முளைக்க ஒரு வழி வைத்திருக்கக் கூடாதா? நீரிலே தான் அது மலர வேண்டும் என்ற நியதியை ஏன் வைக்க வேண்டும்?

தாமரை கல்லில் மலர வேண்டாமே! நெஞ்சு கல்லாக இருக்கிறதே, அதை மாற்றி நீர்ப் பொய்கையாகச் செய்து விட்டால் என்ன? தாமரை மலராத கல்லை வைத்துக் கொண்டு என்ன செய்வது?

அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர் 430-

அறிவுடையவர், வேறொன்றுமில்லாதவராயினும் எல்லாம் உடையவரே; அறிவில்லாதவர், வேறு எல்லாம் உடையவராயினும் ஒன்றும் இல்லாதவரே ஆவர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

திணியான மனோசிலை மீதுனதாள்
அணியார் அரவிந்தம் அரும்புமதோ

என்று அருணகிரிநாதரே ஏங்கிப் போனாரே. கல்லுக்குள்ளே வலிய கல்லாகிய நெஞ்சத்திலே அணியார்ந்த அரவிந்தம் அரும்புமா? இந்தக் கவலையைத் தீர்ப்பவர் யார்?

ஆம். நெஞ்சு கல்லாக இருப்பது மாறவேண்டும். நீராக மாறிவிடவேண்டும். கல்லைப் போலக் கட்டியாக இருக்கிற பனிக்கட்டி நீராக உருக வில்லையா? பனிக்கட்டியாக இருக்கும் போது அது கட்டிப்பொருள்; உருகி விட்டால் நீர்ப்பொருள். அது மாதிரி நெஞ்சு திண்ணியதாக இருந்தால் கல். உருகிவிட்டால், நீராளமாக உருகிவிட்டால், முருகனுடைய அருணதள பாத பத்மம் மலரும் இடமாகி விடலாமே. ஆகவே பாத தாமரையைக் கல்லிலே பதிக்கும் விருப்பமுடையத்தேடி அலைவதைவிட இந்தக் கல்லை உருக்கும் வித்தையை நாடலாமே!

'நெஞ்சக் கன கல்லும் நெகிழ்ந்துருக' என்று அருணகிரிப் பெருமான் வழிகாட்டி யிருக்கிறாரே. நெருப்பாகிய கனத்த கல்லும் நெகிழ்ந்து உருக வழி இருக்கிறது போல் இருக்கிறதே. சந்திரகாந்தக் கல் உருகுவதாகக் கேட்டிருக்கின்றோம். சந்திரன் கடன் வாங்கும் தேசுடையவன். சூரியனிடத்திலிருந்து ஒளியை வாங்கிக் கொண்டு உதவுகின்றவன். அவனுடைய மின்னுஞ் சிறிய ஒளியே ஒரு கல்லை உருக்குமானால் சோதியிற் பெரிய சோதியாகிய முருகனுடைய தேசு கல்லை உருக்காதா? நிச்சயமாக இந்த வலிய கல் உருக வழி உண்டு. அப்படி உருகுவதற்குரிய தந்திரத்தை யார் சொல்லியிருக்கிறார்கள்? அருணகிரிப்பெருமானையே கேட்கலாமே.

'இந்த மனமாகிய கல் திண்ணியது. ஆண்டவன் பாதமோ தாமரை. தாமரை கல்லில் அரும்புமா?' என்று அவர் சொன்னபோது பயந்து போனோம். ஆனால் 'நெஞ்சக் கன கல்லும் நெகிழ்ந்துருகும்' என்று கருணையோடு அவர் சொன்னதைப் படித்த போது கொஞ்சம் நம்பிக்கை உண்டாயிற்று. 'நெஞ்சு உருகுமா? பாத தாமரை மலரும்படி நீராகுமா?' என்று கேள்விமேல் கேள்வி போட்டுப் பார்க்கலாம். 'கருணைக்கு அருணகிரி' என்று சொல்லுவார்களே; அவர் கருணை விருத்தியினால் நமக்கு ஒரு வழி காட்டுவாரே!

ஓஹோஹோ! முன்பே வழி காட்டியிருக்கிறாரே. அதை நாம் கவனிக்கவில்லையே! உருகுவதற்கு வழியைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். அதற்காகப் பணம் கொடுக்க வேண்டாம். தவம் செய்ய வேண்டாம். காசு செலவு செய்ய வேண்டாம். 'முருகன், குமரன், குகன்', என்று மொழிந்து கொண்டிருந்தால் போதும். அந்தத் திருநாமங்களில் உள்ளத்தை ஈடுபடுத்தி வாயினால் மொழிந்தால் மனம் நெக்குவிடும். நெக்குவிட்டு உருகும். நெஞ்சு உருகினால் ஆண்டவன் அருள் செய்வான். அவன் பாத தாமரை நெஞ்சில் வந்து நிற்கும். அதாவது, அவனே உள்ளத் திருக்கோயிலில் வெளிப்பட்டு விளங்குவான்.

முருகன் குமரன் குகனென்று மொழிந்து
உருகும் செயல்தந்து உணர்வென்று அருள்வாய்

என்று அருணகிரி மாமுனிவர் முருகனைக் கேட்கிறார். முருகன், குமரன், குகன் என்று விடாமல் அன்போடு மொழிந்தால் உள்ளம் உருகும். அப்போது நெஞ்சத்தின் வலிமை நீங்கும், திண்மை ஒழியும். அது கல்லின் தன்மையை இழந்து நீரின் தன்மையை அடையும். அன்பினால் உருகிய உள்ளத் தடாகத்திலே இள முருகன் பாத தாமரை மலரும், தானாகிய அணியார் அரவிந்தம் அலரும்.

அதனால் தான் நம்முடைய பெரியோர்கள் இறைவன் திருநாமத்தை வாயாரப் பாடச் சொன்னார்கள். அவன் திருப்புகழை வாயாரப் பாடி ஆடச் சொன்னார்கள். 'வாயாரத் தன்னடியே பாடும் தொண்டர் இனத்தகத்தான்' என்றும், 'பரவாமல் வாயாரப் பாடி ஆடிப் பணிந்தொழுது ஆறுதலடைந்தார் பாவம் போக்க கிருபையை' என்றும் அப்பர் சுவாமிகள் அருளிச் செய்திருக்கிறார். ஆகவே அவர்கள் காட்டிய வழியில் போனால் கல்லையும் கனிவிக்கும் வித்தையில் வல்லவராகி விடுவோம்.

Those who possess wisdom, possess every thing; those who have not wisdom, whatever they may possess, have nothing.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிதான மனிதத்தின் புனிதமான இறுதி யாத்திரை

- முருகவேள் பரமநாதன் -

மனிதப் பிறவி மகத்தானது. எப்போ மனிதம் கனிபழம் போல மனக்கனிவையே வாழைப்பழத்துக்கு ஒப்பிட்டார் பாரதியார் பெருந்தகை. அன்பு என்னும் மனிதப்பண்பானது மகத்தான சக்தி. அன்புடையார் என்பும் பிறருக்கு வழங்குவார். நேயம், பரிவு, பாசம், நார் என்பன அன்பைக் குறிக்கும் வார்த்தைகள். அன்பே சிவம் என்கிறது சைவநெறி. பாசம், பாசம் வார்த்தைகள் யதார்த்தத்தோடு தொடர்புடையன. இந்த அன்பின் வழியான இறைவனுடைய பாக்கியம் என்கிறது திருமூலம்.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே

என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போல் கனலில் பொரிய வறுப்பினும்
அன்போடு உருகி அகங்குழைவார்க்கன்றி
என்போல் மணியினை எய்த ஒண்ணாதே.

ஆர்வம் உடையவர் காண்பர் அரன்தன்னை
ஈரம் உடையவர் காண்பார் இணையடி
பாரம் உடையவர் காண்பார் பவந்தன்னைக்
கோர நெறிக்கொடு கொங்குபுக் காரே.

அன்பிலுள்ளான் புறத்துள்ளான் உடலாயுள்ளான்
முன்பிலுள்ளான் முனிவர்க்கும் பிரானவன்
அன்பிலுள்ளாகி அமரும் அரும்பொருள்
அன்பிலுள்ளார்க்கே அணைந்துணையாமே.

இவ்வுலகம் காரணையே தாகக்கு பொய்க்கில்லாம் போலிருக்கு. மனிதம் கெட்டுப்போனதினாலே மனித நேயம் பட்டுப் போச்சு. ஆகவே பணத்துக்குக் கூட மனித நேயத்தைப் பெறமுடியாத காலமிது. எல்லா உயிர் தொகுதிகளிலும் மேலான மனுடம் தன்னைத் தாழ்த்திக் கொண்டதால் மற்ற உயிரினங்களிலும் தாழ்ந்து நிற்கிறது. நாய், பசு, புறா, அணில் வேறுபாடற்ற மிக பக்குவப் பண்புகளால் மதிக்கப்படுகின்றன. "வாய்க்குது நந்தாக வீடே பிறவிமை சித்திருகின்" என்பது அப்பர் வாக்கு. எனவே உயர்வாம் பண்புகளை வளர்த்து உத்தம வாழ்வு மேற்கொள்ள வேண்டியது மனிதம்.

இதைப்புடமாக ஔவையார் "அரிது அரிது மானிடராதல் அரிது" என்று பாடினார். இந்தச் சிலிருடலும் தோற்றமும் மறைவும் உண்டு. பிறப்பு இறப்பு என்னும் இரு எல்லைக்குள் கட்டுப்பட்டதே நம்வாழ்வு. இதற்குள் எத்தனை போராட்டம், எத்தனை திண்டாட்டம், கொண்டாட்டமும் கூட. எத்தனை கட்டம், நட்டம், இன்பம், துன்பம், நோய்பிணி, வறுமை, செம்மை போன்ற இரட்டைகளின் தாக்கங்களும் மற்றுமொன்று எத்தனையோ. மேலே பசி, தாகம் போன்ற இயற்கை உபாதைகள் எத்தனை. கவலையும் மகிழ்ச்சியும் மாறி மாறி வரும். இவ்வளவு விரக்தியான எதிர்ப்புப் போராடி நீச்சல் அடித்து வெற்றி கண்டதே வாழ்க்கை. நீண்ட தோல்விகளைக் கண்டு தளரக் கூடாது. எப்போ பிறப்போம் எப்போ இப்பூமியை மறப்போம் என்று துறந்த ஞானிக்கும் விளங்காது. ஏன் பிறந்தோமென்று கூடத் தெரியவில்லை. என்றோ எமது வீட்டுக் கதவைக் காலதேவன் தட்டுவான். போகவேண்டியதுதான். மறுத்து போக்குக் கூற வாய்ப்பே இல்லை. இந்த மரணம் எல்லோருக்கும் பொது நிகழ்வு. மனிதனும் மனிதன் மரணத்துக்குக் கௌரவம், மதிப்பும் கொடுக்கிறது. மனித ஆயுளின் எல்லையை நூறாக வேதங்கள் பேசுகின்றன. ஆனால் மனிதனுக்கு நீண்ட காலம் வாழ வேண்டுமென்ற பேராசையுண்டு என்பதைக் குபேரனை விளித்துக் காட்டுகின்றார், ஒரு பாடலில்

ஆகைக் கோளனைக்கவ அலிலமெனாட்டிய
பானிதம்
கடல் மீதில் ஆகவா சேர்கின்றவைகள்
அளகேசன் நிகராகஅம்பெருஞ் செல்வம் வைத்தபேரும்
நேசமுறு இரசவாத வித்தையைக் கண்டுணர்
நெடுநாள் இருந்த பேரும் நிலையாகவே இன்னும்
காயகற்பந்தேடி நெஞ்சு புண்ணானார்
பரிபூரணானந்தம்

(அளகேசன் - குபேரன்
காயம் - உடம்பு, மருந்து - மருந்து)

நமக்குக் கிடைத்த இக்காயம் பெற்றதில் எம்மைப்பற்றிச் சிந்தித்தோமா எம் ஆத்மாவைப்பற்றிச் சிந்தித்தோமா?

வாழ்நாளை வீணடிக்காமல் பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தை நாம் மறந்து விட்டு விடுகிறோம். எனவே இறப்பு வருமென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாது நாளைக்குப் பார்ப்போமென்று யோசிப்பதை விட இன்றே இப்பொழுதே நம்கடமைகளை மேற்கொள்ள வேண்டும். மனித வாழ்வின் இறுதிப் பயணத்தைப் புனித யாத்திரை என்கின்றோம். பிரயாணம், பயணம், வழி யாத்திரை என்பதன் பயனும் பொருளும் விசித்திரமானது.

எல்லாச் சமயத்தாரும் புனித தலங்களுக்கு யாத்திரை செய்கிறார்கள். இஸ்லாமியர் இதை மெக்கயாத்திரை என்பர். சைவசமயிகள் காசி, கதிர்காமம், இராமேசுவரம், கேதாரம், கைலாயம் என்று பக்தி சிரத்தையான யாத்திரை செய்கின்றார்கள். இலங்கையில் ஹஜ் யாத்திரை செல்வதை வாழ்வின் கடமை என நினைப்பதை நேரில் காண்கின்றோம். புத்தகயா போன்ற தலங்களுக்குப் பௌத்தர்கள் போவதுபோல் பெருமளவில் ஜெருசலேம் போன்ற புனித பூமியைத் தரிசிக்கக் கிறிஸ்தவர்கள் செல்கின்றனர். இதனால் ஆத்ம விடுதலையும் மனப் பரிசுத்தமும், இதய சுத்தியும், மனப் பூரணமும் பெறுகின்றனர். பயணமனைத்தும் விட்டுகிறது. நான் யாவரும் விடுதலை பெறுகிறார்கள். எனினும் மரணம் மனிதனைத் துரத்திக் கொண்டே இருக்கிறது. எப்போ எங்கே எப்படி மரணம் சம்பவிக்குமென்று எவருக்குமே தெரியாது. சில முத்தர்கள் மட்டும் மகாசமாதி பெற்றனர். இந்த மரணம் கருவிலேயே வரலாம், பிறந்தவுடன் நிகழலாம். ஆடிஓடி விளையாடும் பருவத்திலிருக்கலாம். இல்லாவிடில் பல காலத்தும் வரும் முதுமையில் இயற்கை எய்தலும் உண்டு விபத்தாலோ, நோய்களாலோ பாதிப்போ ஏற்படலாம். மன அமைதியுடனும் நிறைவுடனும் உயர்ந்த இறைவனைத் தான் நம் முன்னோர் வலியுறுத்திய பாதையில் எல்லாத் தீமைகளின்றி என் ஆவி பிரிய வேண்டும் என இறைவனை வேண்டினர். வாழ்க்கை ஆற்றுப் போன்றது. வாழ்வு எப்படி அமைந்தாலும் பரவாயில்லை, மரணம் மட்டும் சிறப்பாய் அமைய வேண்டுமென மக்கள் அறிவியல் என்ற தத்துவ ஞானி கூறினார். இவர் மேல் பிறர் நினைவிருக்கின்ற இறுதியாத்திரையே மரணம். இந்த மரணம் வேதனையின்றி (உயிர்பிரிதல்) நடக்க வேண்டுமெனப் பலர் எழுதி வைத்தனர்.

தாயுமானத் தேசிகரின் பாடல் ஒன்று இப்புனித யாத்திரையைப் பற்றிப் பேசுகிறது.

மந்த மாருத மேலை குடியிருந்தை மன்று மகிழுமி
வரைமொழிந்து நிறைவளித்த மாயிலை வாச தேன்மேவு
செச்சை மலர் விழுது கொணரு திசி சிந்து தாளமாரு
சேரு மூர்த்தி நீறு பூசிய செல்வ நெடிய நாயக
வெறுமைகளை வாசு தரும விக தரு வந்தெனமேல
விழுந்த மூர்த்தி மனம் மாந்த விழுமத்தை முன்னைமுதி
மருவு வந்த வழுச மொழு மிக்க வெவ்வேறு மகிழ்வு
மதுப வர்க்கமுருளி பக்கு மதுப வாழ்த்து வெயாமனே

- ஸ்ரீதாயுமானசுவாமிகள் -

(மருவ - சேர்ந்தவர்கள். அமிர்ந்தது மனதும் திருவளிர்ப்பிரகத்தில் நித்திய வாழுந்தெய்வம். வரை - கோலங்களை மலை. திரை பலகட்டம். வாசுதேவ - வாசுதேவனுடைய, மருள் இயக்கும் - மருளுடைய ஒட்டுமின்ற, அடியார் பாவகர். அளிக்க வேண்டும் யாத்திரை வேண்டும்)

இந்த உயிர்ப்பிரிந்த யாத்திரைக்கு அதிமுக்கியம் அளிக்கப்படுவது எல்லா மதங்களின் தர்மமாகும். உயிர் பிரிந்து போனபின் இறுதிச்சடங்குகள் ஒவ்வொரு மதத்திலும் வெவ்வேறானவையாக உள்ளன. எனினும் இந்து மதம் ஆசைத்துக்கொடுத்த பேசும். எனினும் சைவக்கிரியைகள் மாறுபட்டன.

எனினும் பிராமணர், சைவர்கள், வேளாளர், அரசர்க்கு என்று பேதம் காட்டுவதும், கிரியைகட்குப் பேரம் பேசுவதும் வருத்தத்திற்குரியவையாம். வேறு மதப் பட்டவர்களும், ஆராதனைகளும் பரித்தமாயும், அனாதிரயமும், ஆத்மார்த்தமாயும், மதிப்பிழந்ததாயும் பணம் பெறுவ இல்லாத சேவை மனப்பான்மை குறைவாயும் அமையக் காண்கின்றோம். பௌத்த, இஸ்லாமிய, கிறிஸ்தவ மரண கிரியைப் பந்துவாரியிலோர் இதை அவதானித் திருப்பர்.

உயிர் உடம்மை நீத்துப் பிரிந்த பின் சரீரத்தைப் பிணமென்று சொல்வர். ஆனால் அழியா தென்கிறது சாஸ்திரம். ஆத்மாவுக்கு ... குடியிருக்கும் கோயில் உடம்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதற்காகவும், சைவசமயத்தில் ஏற்பட்ட கிரியைகள், செய்பவர் கூட வித்தியாசம். ஒவ்வொரு குலத்திற்கும் ஒவ்வொரு விதம் ஏனிந்த அநியாயம். ஆத்மாவுக்குமா சாதிபேதம், சமயபேதம். வெண்கலப் பாத்திரம் உடைந்தால் வேணுமென்று பேணுவோம். மண்கலம் உடைந்தால் உப்பேனும் போட உதவுமெனப் பாதுகாப்போம். ஆனால் நம் கலம் (உடம்பு) உடைந்த போது நாறுமென்று போடுவோமெனச் சிவவாக்கியர் சொல்கிறார்.

திருமூலர் வெகுநாசூக்காகப் பாடினார்.

ஊரெலாம் கூடி ஒலிக்க அழுதிட்டு
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டு
சூரையங்காட்டிடைக் கொண்டு போய்ச்சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பு ஒழிந்தார்களே

ஓட்டைச் சிறு வீடு உடம்பிருந்த பாண்டமெடி எனச் சித்தர்களும் பாடுகிறார். சீர்மாந்தரும் கொடுமிரியும் சிறுகுடிலைத் திருவாசகம் குறிப்பிடும். பட்டினத்தார், அருணகிரியார் பாடலைப் புரிந்தால் இவ்வுடலின் பரிச்சிடும். இவ்வுடம்பு நடமாடும் போது எப்படியெல்லாம் பேணினோம். வெந்நீர் படப் பொறாத உடம்பு. நெருப்பிலாறிச் சகிக்காத சரீரம். முட்டைத்தால் முள்ளும் காயம் காயமே இது பொய்யடா. காற்றடைத்த பையடா. வாழ்வது மாயம், மண்ணாவது திண்ணம் என்ற உண்மையை நாம் உணர்ந்தோமா. இவ்வுடம்பை வைத்துக் கொண்டு எவ்வளவு அடாவடிகள் அநியாயங்கள் செய்வோம். நன்மையே செய்யப் பிறந்த நீ நன்மை செய்யாவிட்டாலும் தீமை செய்யாதே என்பது விவேகானந்தர் வாக்கு. நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின் என்கிறார் சங்கப்புலவர். உதவி செய்யாவிட்டாலும் உபத்திரவம் செய்யாதிருப்பதே மனித நேயம். இவ்வுடம்பால் நன்மையும் செய்யலாம். கெடுதியும் இழைக்கலாம். நன்மை செய்தவர் நன்மையைப் பெறுவர். தீமையைச் செய்தவர் அதன் பலனை அனுபவிப்பர். இந்த உடம்பு நம் வாழ்க்கைக்கு ஆதாரமாயிருக்கிறது. அதை எண்ணி இவ்வுடம்புக்கோ, உயிருக்கோ இதைத்தந்த இறைவனுக்கோ நன்றியுடையவர்களாய் இருந்தோமா. ஒன்றும் வேண்டாம். இறைவனுக்கு உணவு உண்ணும் போதாவது நன்றி பாராட்டினோமா? தூக்கத்துக்கும் போதும் போதாதென அவ்வுடலினை நினைந்தோமா! சரி அவன் [illegible] எவ்வளவு விழுமியம் நிறைந்தவர்கள். மனித நிலையைக் கொண்டு எதை முன்னெடுத்துச் சென்றோமா? பெருமை நீத்தி என்ன பயன். போனது நாம் அனாதைப் போனோம். புனித நாள் இதுவான் என்று நாம் கருமங்களை மேற்கொள்ள வேண்டும். ஆன்றோடுசெல்லும் கர்மமும் போல் விதிவழிப்படும் ஆருயிர். எனவே மனிதம் பேணி மனிதத்தை நிலை நாட்டுவதே மனித இலட்சியம், மனித நாகரீகமும் ஆகும்.

எமது இறுதியாத்திரைகளின் சடங்குகளும், ஆராதனைகளும், பிரார்த்தனைகளும் மக்களின் மனதில் வெளிச்சத்தைப் பரப்ப வேண்டும். இந்துக்களின் கௌரவத்தை ஆத்மிக வழியில் வெளிப்படுத்த வேண்டும். தூய்மை, புனிதம், அமைதி, மனநிறைவு, துன்ப நீக்கம், ஆத்மாவுக்கான ஆசி, அங்கே சமூகமளித்திருப்போருக்கான ஆறுதல் தராத எந்தச் சடங்கும் பிரயோசனமே இல்லை. மற்றும் சமயத்தாருடன் எம்மை ஒப்பிட்டு பண்ணி நம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். பெண்கள் பறை உடைத்தல், வெடிக்கொடி கட்டுதல், கவலை, அமைதியின் அடையாளங்கள், கம்பளவீடுகளில் இது இல்லை. மற்ற மத குருமார்கள் தாமே வந்து ஆத்ம சாந்தி பிரார்த்தனை செய்கிறார்கள். பல ஆண்களும் பெண்களும் மனதைத் தொடும் சங்கீதம் பாடுகின்றார்கள். அவர்களிலே ஒரு ஒழுங்கு இரக்கம் நடைமுறையிலிருக்கின்றது. எங்கள் நிகழ்வும் எங்கள் மரணவீடுகள் சந்தை போன்ற இரைச்சல். அமைதியைக் குலைக்கும். ஐயர் சம்பளத்துக்கு வருவார். ஏதோ செய்கிறார். எவருக்கும் விளங்குவதில்லை. ஆத்மார்த்தமாக ஏதும் சொல்வதும் இல்லை. கூட்டிணைப்போடும் பொருட்களோடும் விடுசெல்வார். உதவியாளருக்கும் சம்பளம் வேண்டுமாம். ஒரு ஆறுதல் மொழி இக்கிரியைகளால் ஆத்மாவுக்கு என்ன பலன் என ஒரு வார்த்தை பேசமாட்டார். காலையிலும் அவருக்கும் தொடர்பே இல்லை. தேவாரம் பாடுபவர்கள் கூட சம்பளத்துக்கே அமர்த்தப்படுவர். இதுவும் வெறுமைக்குக்கது. வெறும் வாயளவே, உள்ளத்தைத் தொடுவதில்லை. திருக்கூட்டம் செய்பவரும் இறந்தவரின் புகழையே பேசுவர். இந்த நிலைமை மாற வேண்டும், மாற்றப்பட வேண்டும். சிறப்புக்குரிய எவரோ விடயம் சிறிமகை போன்று இடங்களில் ஒரே [illegible]த்தில், ஒரே மேடையில், ஒரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பத்தில் வளரும் அக்கினியோடு நடை பெறும். பலர் தர்ப்பை போட்டுச் சங்கற்பம் செய்ய கிரியையொன்றேயாகும். அவரும் கிரியை செய்வது வேறு ஒருவர் அக்கினியோடு சம்பந்தமில்லை செய்வது வேறொருவர். பலருக்கு ஒரே நேரத்தில் அக்கினியோடு செய்யும் விளையாட்டுப்போல் ஆலயங்களிலும் ஒரு முறை இடம் பெறுவதுண்டு. ஆண்டவனுக்கு அபிஷேகம் செய்பவர் காசு கட்டி இருப்பர் எசமானரோ அருட்காரரோ ஒரு குழப்பி செய்வார். அபிஷேகம் ஒன்றுதான் பலர் தர்ப்பைபோட்டுச் சங்கற்பம் செய்வர். ஒரு நேரம் ஒருவரது அபிஷேகமே செய்து அவரது நேர்த்தியை நிறைவேற்ற வேண்டும் என்பதை உபயகாரர் அறியாதவருக்கோ, பணியகாரருக்கோ எடுத்துரைக்க வேண்டும். இதனையறியாமல் மக்கள் ஆலயத்தையும், ஐயரையும் வெறுக்கிறார்கள். சமயம் மாறவும் செய்கிறார்கள். அனாதைகள், ஏழைகள், ஆதரவற்றோர் என்போருக்கு உணவு கொடுப்பதே நல்ல தர்மமாகும். வேலே சைவசமயத்தில் விளைந்து வளரும் களைகளைப் பிடுங்கியெறிந்து சைவப்பயிர் வளர்ப்போமாக. மனிதத்தின் புனிதமான திருவருளை மதிக்காத சடங்குகளை விட்டு நல்ல ஒழுக்கங்களை மேற்கொள்வோமாக.

"சைவமே சிந்திப்பாயாக"

---

### இன்றியமையாத தீர்த்தம்

- [illegible] -

தேவர் வழிபாடு இக்கலை ஊக்கலை
உன்று மூ காண்டல் மயிர்களைதல் உணவொழுகல்
வைதல் ஆயினோ ஏனைவினைச்சக் கிழமைகள்
மெய்யுறல் முனை மயிர்முறல் உரைத்தலும்
ஆமுரா காடுக டீ.

கண்ணால் வணங்கப்படும் தேவரை வழிபடுகா கண்ணும், தீட்டுக்களைக் கண்டவிடத்தும், தாய் தந்தையின் மெய்யுடையாளரிடத்தும், உண்டதனைக் கண்டவிடத்தும், மயிர் களைந்தவிடத்தும், உண்ணும் பொழுதும், பொழுதோடு உறங்கியவிடத்தும், இணைவிழைச்சி உண்டாயவிடத்தும், கீழ்மக்கள் உடம்பு தீண்டியவிடத்தும், மூத்திர புரீடங்கள் கழித்தவிடத்தும் என ஐந் பத்திடத்தும் நீராடுக.

## சந்நிதிக் கந்தன் காப்பான்



- கவிஞர் க. கணேசலிங்கம் -

செல்வச்சந்நிதிக் கோயிலில் மேவருள்
செய்யும் குமரன் வடிவேலவன்தான் !
அல்லல் அகன்றாரும் பிணிபக ஒழும்அவன்
அருளோ பெருகி எமைக்காக்கும்!

தொண்டைமானாற்றுக் கரையினில் மேஅன்பர்
தொழுதிடும் முருகன் உலாவருவான்!
அன்புடை அன்பர் பசியினைப் போக்கிடும்
அன்னதானத்தும் கந்தனவன்!

உயிரின் உயிராய் ஒன்றாய் இருந்தே
உடம்பில் பொறையே சேர்ந்து வாழ்வான்!
உயிரில் வேறாய் நிற்பான் எனினும்
உடனாய் நின்றே உயர்த்திடுவான்!

அம்மை தந்தைக் குமாரே எம்மைய
தனிமுதல் சந்நிதி எழுந்துள்ளான்!
எம்மைத் திருவனை பயன்றிடு வாஇனி
இனித்தாய்ப் புனிதமும் விருந்துவிடுவர்!

காவடி போடுபல காதம் வந்தவர்
கந்தனைக் கண்டுமெய் சிலிர்க்கின்றார்!
கோடடிக் கந்தனின் காலடி வீழ்ந்தவர்
கண்ணீர்த் திருக்கரம் கூப்புகிறார்!

ஏழ்மையும் செல்வமும் இங்கிலை முருகனின்
எல்லையில் அருளினில் மூழ்குகிறார்!
தானினை போற்றிடு மறையவர் வள்ளியின்
காவலனை முருகனை வாழ்த்துகிறார்!

கந்தா முருகா கடம்பா என்றுநாம்
கதறி வணங்கினால் காத்திடுவான்!
சிந்தையில் ஒன்றிப் பணிந்திடு என்றுமே
சந்நிதி முருகன் அணைத்திடுவான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிழை திருத்தம்

பொங்கு ஆடி இதழில் 24ம் பக்கத்தில் உள்ள ஈசான சிவாசாரியார் என்பதை ஈசான சிவம் எனத் திருத்திக் கொள்க.

- ஆசிரியர்

## நினைவிற் கொள்வதற்கு

ஐப்பசி

| | | | |
|---|---|---|---|
| 01 | 18.10.2003 | சனி | மாதப்பிறப்பு |
| 06 | 23.10.2003 | வியாழன் | பிரதோஷ விரதம் |
| 07 | 24.10.2003 | வெள்ளி | தீபாவளி, ஐப்பசி வெள்ளி |
| 08 | 25.10.2003 | சனி | அமாவாசை விரதம் கேதாரகௌரிவிரதம் |
| 09 | 26.10.2003 | ஞாயிறு | கந்த ஷஷ்டி விரதாரம்பம் |
| 11 | 28.10.2003 | செவ்வாய் | மெய்கண்ட தேவர் குருபூசை |
| 12 | 29.10.2003 | புதன் | ஐயடிகள் காடவர் கோனார் குரு பூசை |
| 13 | 30.10.2003 | வியாழன் | கந்தஷஷ்டி விரதம் |
| 14 | 31.10.2003 | வெள்ளி | ஐப்பசி வெள்ளி |
| 20 | 06.11.2003 | வியாழன் | பிரதோஷ விரதம் |
| 21 | 07.11.2003 | வெள்ளி | ஐப்பசி வெள்ளி |
| 22 | 08.11.2003 | சனி | பூரணை விரதம், திருமூலர் குருபூசை |
| 23 | 09.11.2003 | ஞாயிறு | கார்த்திகை விரதம், நெடுமாறர் குருபூசை |
| 24 | 10.11.2003 | திங்கள் | இடங்கழியார் குருபூசை |
| 27 | 13.11.2003 | வியாழன் | சங்கடஹரசதுர்த்தி விரதம் |
| 28 | 14.11.2003 | வெள்ளி | ஐப்பசி வெள்ளி |
| 29 | 15.11.2003 | சனி | சத்தியார் குருபூசை |

சிவதீட்சை

24.08.2003 ஞாயிற்றுக் கிழமை கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்திலும் 17.10.2003 வெள்ளிக் கிழமை மட்டக்களப்பு [illegible] [illegible] சிவதீட்சை வைபவம் இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தக விற்பனை

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

## திருவாசகம்

### வெளிவந்துள்ளது.

நீண்டகாலப் பாவனைக்கு ஏற்றவண்ணம் பிளாஸ்டிக் கவருடன் கூடிய திருவாசகம் விற்பனைக்கு உண்டு. பிரதி ஒன்றின் விலை ரூபா 150/- மட்டுமே. மொத்தக் கொள்வனவிற்குக் கழிவு உண்டு.

* விதியை வெல்வது எப்படி?
* திருவருட்பயன் - மூலமும் உரையும்

ஆகிய நூல்களும் விற்பனைக்கு உண்டு.

கிடைக்கும் இடம்:

**சைவநீதி**

195, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு-13.

எங்களிடம்,

ஐம்பொன், வெள்ளி, பஞ்சலோகம் வார்ப்பு விக்கிரகங்கள், வீட்டுப்பூசைப் பொருட்கள், கலைநயம் மிக்க சிலா விக்கிரகங்கள், கோபுரக்கலசங்கள், பட்டுக்குடைகள், கும்பக்குடைகள், சந்திரவட்ட, பூச்சக்கரக் குடைகள், ஆலவட்டம், சுருட்டி மகர தோரணம், திரைச்சீலைகள், வெள்ளி, முத்து, கிரீடங்கள், வாக மாலை மற்றும் மின்சார மங்கள வாத்தியங்கள், இந்திய கலைத்திறம் படைத்த குத்துவிளக்குகள், வீட்டு அலங்காரப் பொருட்கள் குறைந்த விலையில் கிடைக்கும்.


# கலையரசி

**23/1, விவேகானந்த மேடு, கொழும்பு-13. தொ.பே: 478885**

சந்தா நேயர் கவனத்திற்கு

* உரிய காலத்தில் சந்தாவைப் புதிப்பித்துக்கொள்ளவும்.
* முகவரி மாற்றம் இருப்பின் எமக்கு அறியத்தரவும்.
* இதழ்கள் ஒழுங்காகக் கிடைக்காவிடின் எம்முடன் தொடர்புகொள்ளவும். கிடைக்காத இதழ்களை அனுப்பிவைப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



GeDora

**Dream has Come True**

***EXPRESS SERVICE***

***Housing Loans***

***Within***

**24 BUSINESS**

***Hours***

**Hot Line / Fax: 01 2573510**

NSB

*Your Family Savings Bank*


Regd. No. QD/48/News 20... ...னத்தினரால் லக்ஷ்மி அச்சகத்தில் அச்சிட்டு ... இல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org